PUBLIC LIBRARY
JAFFNA

செயராசுதன நூலக
யாழ்ப்பாணம்.

மலர் : 134
இதழ் : 21
பக்கங்கள் : 08
திகதி : 14. 11. 2010
விலை : 15. 00/=

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு
Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

# பாதுகாவலன்
# Paathukavalan

யாழ் மறைமாவட்டத்தின் உத்தியோகபூர்வ கத்தோலிக்க பத்திரிகை

# மூவின மக்களுக்கும் சம அந்தஸ்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

## – கர்தினால் மல்கம் ரஞ்சித் –

**இலங்கைத் தீவில் அமைதியும் இனங்களிற்கிடையில் சமாதானத்தையும் ஏற்படுத்தும் பணியில் கத்தோலிக்க திருச்சபை பெரும் பங்கை வகுத்து வருகின்றது. இன்று சமூகங்களுக்கிடையில் நம்பிக்கையும், புரிந்துணர்வும் இல்லாமல் போய்விட்டது. பீதியும், சந்தேகமும் குடிகொண்டுள்ளன. எனவே மூவின மக்களுக்கும் சம அந்தஸ்து வழங்கி, அனைத்து மக்களுக்கிடையிலும் சமாதானத்தையும், ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த மும்முரமாக இத்தருணத்தில் உழைக்க வேண்டும்.**



மேலும் காலம் தாழ்த்தாது இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - எனவும் கத்தோலிக்க திருச்சபையின் மூலம் வலியுறுத்துகின்றோம் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள் நல்லிணக்க ஆணைக் குழுவில் தெரிவித்தார்.

## யாழ் மறைமாவட்டக் குருக்களுள் முதல் பேராசிரியர்



யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவரும் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமியத் துறைத் தலைவருமாகிய அருட்பணி ஞானமுத்து பிலேந்திரன் அவர்கள் நேற்றய தினம் (11-11-2010) பேராசிரியராக உயர் பதவி பெற்றுள்ளார். யாழ் மறை மாவட்டக் குருக்களுள் இத்தகைய கல்விசார் உயர் நிலையை முதல்முறையாகப் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. யாழ் ஆயர், குருக்கள் அனைவருடனும் இணைந்து காவலன் அவருக்கு உளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிககின்றது.

## "உலக விஞ்ஞான தினத்தில் பற்றிக்ஸ் மாணவனுக்கு விருது"



உலக விஞ்ஞான தினத்தை (நவம்பர் 12) முன்னிட்டு புதுடில்லி இந்திரா காந்தி தேசிய திறந்த பல்கலைக்கழகம், யுனெஸ்கோவுடன் இணைந்து சார்க் நாடுகளிடையே நடத்திய விஞ்ஞானப் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் சி. செல்வநித்திலன் தெரிவாகியுள்ளார்.

'சார்க்' நாடுகளிடையே 4000 இற்கு மேற்பட்டோர் பங்கு பற்றிய இப் போட்டியில் இலங்கையிலிருந்து மூவர் உட்பட 41 பேர் இரண்டாம் கட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். நவம்பர் 13ஆம் திகதியன்று

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

## தூய ஆவியாரின் துணைகொண்டே நாம் "அப்பா தந்தாய்" என அழைக்கின்றோம்

உறுதிப்பூசுதல் எனும் அருட்சாதனத்தில் நாம் தூய ஆவியாரின் கொடைகளை நிறைவாக பெறுகின்றோம். அவரது துணை கொண்டு அவரின் ஆற்றலினாலேயே நாம் இறைவனை "அப்பா தந்தாய்" என அழைக்கின்றோம். பெற்றுக் கொள்ளும் அவருடைய கொடைகளினாலும், வரங்களினாலும் விசுவாசத்தில் உறுதியடைந்தவர்களாக கிறிஸ்துவின் போர் வீரர்களாகி திருச்சபையைக் கட்டியெழுப்ப அழைக்கப்படுகின்றோம். இவ்வாறு யாழ் தூய மரியன்னை பேராலய பங்கில் 30-10-2010 சனிக்



கிழமை 120 பிள்ளைகளுக்கு உறுதிபூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டபோது ஆயர் தனது மறையுரையில் குறிப்பிட்டார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

## பாதுகாவலன் செய்தியாளர் பயிற்சி

பங்குகள் தோறும், பங்குச் செய்திகளை தொகுத்து அனுப்புகின்ற, 'பாதுகாவலன் செய்தியாளர்களை' உருவாக் குவதை நோக்கமாகக் கொண்டு 'எழுத்தாளர் பயிற்சிப்பட்டறை' ஒன்றை ஒழுங்கு செய்துள்ளோம்.

இதில் கலந்துகொள்ள, உங்கள் பங்கிலுள்ள, எழுத்தில் ஆர்வமுள்ள, இரண்டு பேரைத் தெரிவு செய்து அனுப்புமாறு கேட்கிறோம்.

இடம் : பாதுகாவலன் மண்டபம்
காலம் : 17-11-2010 (புதன்கிழமை)
நேரம் : 9.30 - 3.30

குறிப்பு : மதிய உணவு வழங்கப்படவிருப்பதால், கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை பின்வரும் தொலைபேசி மூலம் உறுதிப்படுத்தவும் எனப் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் தெரிவிக்கின்றார்.

T.P: 021- 222- 2378 , 021- 222- 9041

## அமலமரித் தியாகிகளின் புதிய அதி உயர் தலைவர்

அமலமரித் தியாகிகளின் 35வது மகாநாடு உரோமா புரியில் நடைபெற்றது. இம்மகா நாட்டில் 21வது நாளாகிய 28-09-2010 அமலமரித்தியாகிகளின் அதி



உயர் தலைவராக அமெரிக்க நாட்டின் அமலமரித் தியாகிகளின் முதல்வர் லூயிஸ் லோகன் 13வது அதி உயர் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். உலகில் 66 நாடுகளில் பணிபுரியும் 4000 திற்கும் அதிகமான அமதிகளின் உயர்தலைவராக அதிவண லூயிஸ் லோகன் Very Rev. Fr. Louis Lougen OMI வராக பதவி ஏற்கும் அடிகளாரை

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

## - கிறிஸ்மஸ் சிறப்பிதழ் ஆக்கம் -

**வெளிவரவிருக்கும், பாதுகாவலன் கிறிஸ்மஸ் சிறப்பு மலரில், உங்கள் ஆக்கங்கள் இடம் பெற வேண்டுமா? இக்காலத்தின் குறிகளோடு, கிறிஸ்து பிறப்பு விழா கருப்பொருளை மையமாகக் கொண்டு, உங்கள் ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். ஆக்கங்கள் சுருக்கமாகவும், தெளிவான கையெழுத்திலும் இருப்பதை நாம் எதிர்பார்க்கின்றோம். அனுப்பவேண்டிய இறுதித் திகதி 05-12-2010.**

## - புனித மடுத்தீனார் பெருவிழா -

யாழ் மறைமாவட்டத்தின் இதயம் என வர்ணிக்கப்படும் புனித மடுத்தீனார் சிறிய குருமடம் தமது பாதுகாவலரின் பெயர கொண்ட தினத்தை 14-11-2010 அன்று கொண்டாடுகின்றார்கள். அன்றைய தினம் ஆயர் தலைமையில் திருப்பலியும், தொடர்ந்து குருமட அதிபர் அருட்பணி சாள்ஸ்கொலின்ஸ் தலைமையில் மாணவர்களது ஆற்றல்களை வெளிக் கொணரும் நிகழ்வுகளும் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாதமும் நம் வாழ்வும்

அருட்பணி ம.டேவிற் - நியூஜோர்க்

கார்த்திகை மாதம் எம் ஆன்மீக வாழ்வில் மிகவும் முக்கியமான ஓர் மாதமாகும். இந்த உலகில் வாழ்ந்து இறைபதம் அடைந்த அனைவரையும் நினைத்து அவர்களுக்காக மன்றாடும் ஓர் மாதமாகும். சிறப்பாக எம்மண்ணில் நடந்தேறியுள்ள போரில் சிக்கி மரணித்த அனைவரையும் எம் மனதில் இருத்தி அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை பிரார்த்திக்கின்ற ஓர் மாதமாகும். மேலும் எமது வாழ்வின் வளர்ச்சிப் படிக்கட்டுகளில் பலர் தாங்கள் பங்களிப்பை காத்திரமாக வழங்கி இறைவனடி சேர்ந்துள்ளார்கள். இவர்களை நாம் தனிப் பட்டியலில் இந்த மாதத்தில் எம்மனதில் இருத்தி அவர்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறி அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடக்கடமைப்பட்டுள்ளோம்.

இன்னும் இந்த மாதத்தைப்பற்றி சிந்திக்கும் போது இந்த மாதத்தில் மரணம் என்கின்ற மறைபொருளை நாம் ஆழமாக சிந்தித்து அது எந்த நேரத்திலும் நம்மை சந்தித்தாலும் நாம் தகுந்த முறையில் அதனை அரவணைத்துக் கொள்ள நம்மை ஆயத்தப்படுத்துகின்ற ஓர் மாத மாகவும் இந்த மாதம் நமக்கு அமைந்து விடுகின்றது. இந்த நாட்களில் நமது நாளாந்த திருப்பலி வாசகங்களில் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் இருந்து நாம் வாசிக்க கேட்கின்றோம். மரணம் என்ற மறைபொருளைப் பற்றி சிந்திக்க நான்கே அதிகாரங்களைக் கொண்ட இத் திருமுகம் மிகவும் முக்கியமானது என்று கருதுகின்றேன். ஏனெனில் திருத்தூதர் பவுல் தன் வாழ்வில் இறுதிக்கட்டத்தில் தன் மரணம் தன் வாயில் அருகில் வந்துவிட்டது என்பதனை உணர்ந்தவராகவும் அந்த உணர்வு தன் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் இந்த மடலில் தன்னில் மிகவும் அன்பு கொண்ட பிலிப்பிய மக்களுடன் அவர்களின் நன்மைக்காக வரைகின்றார். எனவே இந்த மாதத்தில் இந்த திருமுகத்தை பல தடவைகள் மீண்டும் மீண்டும் வாசிப்பது நம் ஆன்மீக வாழ்வுக்கு மிகுந்த நன்மை பயக்கும் ஓர் ஆன்மீகப்பயிற்சியாகும். விவிலிய வித் துனர்கள் இந்த மடலை ஓர் மகிழ்ச்சியின் மடல் என்று குறிப்பிடுவார்கள். தன் வாழ்வில் இறுதிக்கட்டத்தில் மரணத்தின் வாசலில் இருக்கும் பவுல் அடியாரினால் மகிழ்ச்சியைப் பற்றிப் பேச முடியுமென்றால் அந்த மகிழ்ச்சியின் இரகசியமானது நாம் இந்த மாதத்தில் கற்றுக்கொள்ள கூடிய ஓர் பாடமாகும்.

"நமக்கோ விண்ணகமே தாய் நாடு; அங்கிருந்து தான் மீட்பராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வருவாரெனக் காத்திருக்கிறோம்." (பிலி 3:20) விண்ணகமே எனது தாய் நாடு என்பது புனித பவுலின் அசைக்க முடியாத ஒரு தத்துவமாகும். ஒரு முறை ஒரு மரணச்சடங்கில் பங்குபற்ற சென்றவர்களுடன் ஒரு மகள் தன் தாயைப் பற்றிக் குறிப்பிட்ட வார்த்தை பவுலின் இந்த வார்த்தைகள் எவ்வளவு ஆன்மீக அவரின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை புரிய வைக்கின்றது. அந்த மகள் தன் தாயைப்பற்றிக் குறிப்பிடுகையில் நாங்கள் அயர்லாந்தில் இருந்து வந்து அமெரிக்காவில் குடியேறியதன் அடிப்படையில் இருந்து என் தாய் எனக்கு அடிக்கடி இப்படி சொல்லுவார். நாங்கள் அயர்லாந்தில் இருந்த போது அயர்லாந்து குடியுரிமை வைத்திருந்தோம். இப்போது அமெரிக்காவில் இருக்கும் போது அமெரிக்கா குடியுரிமை வைத்திருக்கின்றோம். ஆனால் இவை இரண்டும் நிரந்தரமானவையல்ல. விண்ணகமே நமது நிரந்தர குடியுரிமையுள்ள தேசமாகும். சிறப்பாக தனது நோயின் காரணமாக துன்பப்பட்ட வேளைகளிலும் இந்த வார்த்தைகளை மீண்டும் சொல்லி மகிழ்ச்சியுடன் இந்த உலக வாழ்வை முடித்துக் கொண்டாள். இந்தத்தாயின் வார்த்தைகள் நமக்கு ஆயிரம் கதைகளை கூறி நிற்கின்றது.

இந்த உலக வாழ்வில் நாம் எல்லோரும் வெறும் பயணிகளே. நிரந்தர குடியேற்ற வாசிகள் அல்ல. இந்த உணர்வு எமது வாழ்வில் ஆழமாக வேரூன்றும் போது அது எமது சிந்தனைப் போக்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். மனித வாழ்வு என்பது கடந்து செல்கின்றதொன்றாகும். அது நிரந்தரமற்ற ஒன்றாகும். அது ஒரு பாலத்தைக் கடப்பது போன்றதொன்றாகும். எவரும் ஒரு பாலத்தால் நிரந்தரமான ஒரு வீட்டைக் கட்டமாட்டார்கள். கட்டினாலும் அது பாலத் தின் நோக்கத்திற்கு முரண்பாடான செயற்பாடாகும். பாலம் கடந்து செல்வதற்கேயாகும். எனவே தான் பவுல் மீண்டும் சொல்லுவார் நாம் வாழும் போது மண்கூடாரத்தில் வாழுகின்றோம். இந்த மண்கூடாரம் தகர்ந்து வீழ்ந்தாலும் எமக்கு நித்திய வீடு ஆயத்தமாக உள்ளது. இந்த பவுல் அடியாரின் உணர்வுகள் நம்முள் எழும் போது வாழ்வு பற்றிய பல தெளிவுகள் நமக்குள் ஏற்படும். முக்கியமாக இந்த உலகம் பற்றி நாம் கொண்டிருக்கும் கண்ணோட்டத்தில் பெரும் மாறுதல் ஏற்படும். சிறப்பாக இந்த உலகப் பொருட்கள் பற்றி நாம் கொண்டிருக்கும் பார்வையில் பெரும் மாறுதல் ஏற்படும்.

ஒரு முறை ஒரு அமெரிக்க சுற்றுலாப் பயணி பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த யூத குருவாகிய கொபெலற் சயிம் (Hofetz Chaim) என்பவரைச் சந்திக்கச் சென்றார். அந்த யூதக்குருவின் மனையானது மிகவும் எளிமையானதாக அமைந்திருந்தது. அறையில் நிறைய புத்தகங்களுடன் ஒரு சிறிய மேசையும் ஒரு சிறிய வாங்குமே இருந்தது. இதனை அவதானித்து ஆச்சரியப்பட்ட அமெரிக்க சுற்றுலாப் பயணி யூதக்குருவிடம் உங்களது தளபாடங்கள் எல்லாம் எங்கே என்று கேட்டார். அதற்கு அந்தச் சுற்றுலாப் பயணி நான் ஒரு பயணி மட்டுமே. நான் பயணித்துக்கொண்டிருக்கின்றேன் என்றார். (But I'm only; a visitor here. I'm only passing through). அதற்கு அந்தக்குருவின் பதில் "நானும் அப்படியே" (So am I). இந்த சிறிய நிகழ்வு இந்த மாதத்தில் நமக்கு பல அர்த்தங்களைத் தருகின்றது. இந்த மாதத்தில் பிலிப்பியருக்கு எழுதப்பட்ட திருமுகத்தை பல முறை வாசித்து மரணம் என்ற மறை பொருளைப் பற்றிச்சிந்தித்து வாழ்வு பெறுவோமாக.

# இலங்கை அப்போஸ்தலர் ஜோசப் வாஸ்

16ம் பகுதி

(நவாலியூர் நாயகி)



குருக்களின் வருகையினால் ஆதரவளித்த வாஸ் அடிகள்
வட இலங்கைக் கிறிஸ்தவரை ஒருவரிடம் ஒப்படைத்தார்
தனது இருப்பிடத்தை யாழ்நகரில் அமைத்துக் கொண்டு
வெனாரோ அடிகள் தன் பணியை ஆரம்பித்தார்

மெனாசெஸ் அடிகள் புத்தளத்தில் தங்கி
கொழும்புடன் நீர் கொழும்பை நிர்வகிக்க ஆரம்பித்தார்
ஜோசவ்வாஸ் அடிகள் பொறுப்புக்களை ஏற்காது
பயணங்கள் செய்து இறைபணியைத் தொடர்ந்தார்

கண்டியில் கொள்ளைநோய் பரவியபோது
ஜோசவ்வாஸ் அடிகளும் கார்வாலோ அடிகளும்
கைவிடப்பட்ட நோயாளர் அனைவரையும்
காப்பாற்றி மனந்திரும்பி திருமுழுக்கு அளித்தனர்

கொழும்பு வாழ் கத்தோலிக்கர் அனுப்பிய பணத்தைக் கொண்டு
நோயுற்றோர் தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்தார்
தோள்களில் பிணங்களைச் சுமந்து சென்று அடக்கம் செய்தார்
இவரது செயல்கள் கண்டு பிறமதத்தோர் வியந்தனர்

அடிகளின் சேவை கண்டு வியந்த கண்டி மன்னன்
கைமாறாய் பணங்கொடுக்க வாஸ் அடிகள் ஏற்கவில்லை
மன்னனோ மனந்திறந்து "வாஸ் அடிகள் இல்லையென்றால்
ஓராயிரம் மிஞ்சாது இது உண்மை" என்று சொன்னான்.

(தொடரும்)

# தூயவர்களின் வரலாறு

அக்டோபர் -31 - புனித அல்போன்ஸ் ரொட்ரிக்ஸ் (1531 - 1617)

இவர் ஸ்பெயின் நாட்டில் தோல் வியாபாரம் செய்து வந்தார். இவருடைய மனைவி மக்கள் இறந்த பின் செப தவ வாழ்வு நடத்தினார். 39-ஆம் வயதில் மஜோர்க்கா தீவில் இயேசு சபையில் சேர்ந்து துணைச் சகோதரர் ஆனார். 35 ஆண்டுகள் வாயில் காவலராக வேலை செய்தார். இவருக்குக் கல்வி அறிவு கிடையாது; எனினும் அநேகர் இவரைக் கலந்து ஆலோசிக்க வருவார்கள். இவரது போதனைகள் மிகுந்த நன்மைகள் செய்தன. இவருக்கு மாதா மீது அதிக பக்தியுண்டு. மாதாவின் சிறிய மந்திரமாலையை இவர் தம் கைப்பட எழுதி பரப்பி வந்தார்.

வாயில் மணி அடித்ததும் கிறிஸ்துநாதரே உள்நுழைய விரும்புவதாக இவர் உருபிகரித்துக் கொள்வார். "ஆண்டவரே, இதோ வருகிறேன்" என்று மகிழ்ச்சியோடு கூறிக்கொண்டு கதவை திறக்கச் செல்வார். வந்தவர்களை வரவேற்பார். இவர் தூயவர் என அங்குள்ள குருக்கள் அறிந்திருந்தனர். எனவே உணவு நேரத்தில் பிரசங்கம் செய்ய இவரை அழைப்பார்கள். ஒரு முறை சபையின் தலைவர் அங்கு வந்திருந்தார். நம் புனிதரைப் பார்த்து, கிரேக்க மொழியில் ஓர் உரை நிகழ்த்தும் என்றார். இவருக்கோ கிரேக்க மொழி தெரியாது. எனினும் தாழ்ச்சியுடன் கீழ்ப்படிந்து பிரசங்க பீடத்தில் ஏறினார். நிறுத்தி ஒரு நிமிட நேரமாக, "கீரியலெய்சொன், கிறிஸ்தெ எலெய்சொன், கீரியலெய்சொன்" என அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

அடிமைகளின் தொண்டன் என அழைக்கப்படும் புனித கிளாவர் இராயப்பர் இவருடன் ஒவ்வொரு நாளும் பேசுவார். அதன் பயனாக இராயப்பர் தென் அமெரிக்காவுக்குப்போய் அபூர்வ சேவை செய்தார். பெரியவர்களுக்கு கீழ்ப்படிந்து நம் புனிதர் சில அரிய நூல்களை எழுதி வைத்திருக்கிறார்.

# புனித பவுஸ்தினாவின் திருநாட் திருப்பலிக் கொண்டாட்டம்

10-10-2010 அன்று யாழ். மறை மாவட்ட பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் முதல்முறையாக இறை இரக்கப் பக்தி நிறுவுனர் அருட் சகோதரி புனித பவுஸ்தினாவின் திருநாட் திருப்பலி சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. 05-10-2010 அன்று திருவிழாத்தினமாக இருந்தபோதும் தவிர்க்க முடியாத காரணங்களால் 10-10-2010ல் திருநாள் கொண்டாடப்பட்டது. பங்கின் புதிய அருட் தந்தை சகாயதாசன் அடிகளாரால் ஒப்புக் கொடுக்கப்பட்ட திருநாட் திருப்பலி இறை இரக்கப் பக்திச் சபையினரால் விசேஷ விதமாக சிறப்பிக்கப்பட்டது. பக்தி பூர்வ

(தொடர்ச்சி மறு பக்கம் பார்க்க)

தகவல்:
திருமதி. சலாக்கின் அரசரட்ணம்,
இ.இ. பக்திசபை அங்கத்தவர்.

# வளமாகும் குடும்ப வாழ்வு

## குடும்பப் பக்கம்

(தொடரும்....)

அருட்பணி எஸ்.ஜே. இராஜநாயகம்



### பிரச்சனைகளைத் தீர்த்தல்

1. ஆக்கபூர்வமற்ற மனக்கோப்புகள் (Unproductive 'Mental Set')

நாம் ஒரு பிரச்சனையைத் தீர்க்க முயலும் போது, எமக்குப் பழக்கமான வழிகளினூடாக பிரச்சனையின் கூறுகளைப் பார்த்து பிரச்சனைகளைத் தீர்க்கின்றோம். உ+ம்: கணவன் மனைவிக்கிடையில் பிரச்சனை என்றால், கணவன் மனைவியை மிரட்டியோ, அல்லது அடித்தோ கணவன் பிரச்சனையைத் தீர்க்கின்றான். பிள்ளைகள் முரண்படும் போது பெற்றோர் இதேபோல செயல்படுகின்றனர். இப்படியாக பிரச்சனைகளைத் தீர்க்க பழக்கப்பட்ட வழிமுறைகளான மனக் கோப்புக்களுக்குள் போய் மாட்டிக் கொண்டு விடுகின்றோம். இப்படியாக மாட்டிக்கொள்கின்றவர்கள் பிரச்சனைகளைத் தீர்க்கும் புதிய வழிமுறைகளைப் பார்க்க முடியாத தன்மையுடையவராக காணப்படுகின்றனர். உளவியலாளர்கள் இதை "இயக்கத் தடை" என்கின்றனர். இங்கு பழக்கப்பட்ட பிரச்சனையின் ஆக்கக் கூறுகளைப் பாவிக்கும் முறையானது பிரச்சனையைத் தீர்ப்பதில் ஆதிக்கம் செலுத்துகின்றது. பிரச்சனைகளை நன்றாகத் தீர்க்க வேண்டுமானால் பிரச்சனையின் கூறுகளை நன்றாகப் புரிந்து கொள்வதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். பிரச்சனைகளைத் தீர்ப்பதில் பின்வரும் சார்புகளும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

2. உறுதிநிலைச்சார்பு (Confirmation Bias)

இங்கு ஒருவர் தனது எண்ணங்கள் சரியானவை என்று காட்ட ஆதாரங்களைத் தேடுகின்றார். உ+ம்: அரசியல்வாதிகள் தங்களுடைய நிலைப்பாட்டிற்கு எவை சாதகமாக வருகிறதோ அதை ஏற்றுக்கொள்வர். எதிரானவற்றைப் புறக்கணிப்பர். நாம் எமது நிலைப்பாட்டை ஆதரிக்கின்றவர்களை ஏற்கின்றோம். எதிரான கருத்துக்களை வைத்திருக்கின்றவர்களை விலக்கி விடுகின்றோம்.

3. நம்பிக்கைச் சார்பு (Belief Bias)

எமது நம்பிக்கைக்கு எதிரான சான்றுகள் இருக்கின்ற போதும் எமது நம்பிக்கைகளையே விடாப்பிடியாக வைத்திருத்தல்.

உ+ம்: கூடாத சகுனங்களால் எடுத்த காரியம் வெற்றிபெறாது என்ற நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த விசுவாசிகள் மட்டில் நம் கடமைகள்

- அருள்திரு இராசேந்திரம் ஸ்ராலின் -

### 3. திருவிவிலியக் கண்ணோட்டத்தில் இறந்த விசுவாசிகள்

புனிதப்படுத்தும் உலகம் பற்றி வேதாகமத்தில் வெளிப்படையான எந்தச் சான்றும் கிடையாதெனினும் மேலைத்தேயத் திருச்சபை, கீழைத்தேசத் திருச்சபை என்பனவற்றில் இறந்த விசுவாசிகளுக்காக ஆன்மீகச் செயல்கள் செய்வது பல நூற்றாண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்ட ஒரு முக்கிய விடயமாகும். இதுபற்றி திருவிவிலியத்தில் கூறப்பட்ட விடயங்களிலிருந்து ஊகிக்க முடிகின்றது.

#### 3.1. பழைய உடன்படிக்கையில

3.1.1. மக்கபே ஆகமம்: இறந்தோர் உயிர்த்தெழுவர் என்ற நம்பிக்கை இஸ்ராயேல் மக்களிடையே கி.மு. இரண்டாம் நூற்றாண்டு காலத்தில் நிலவி வந்துள்ளதை மக்கபேயர் ஆகமத்தில் காண முடிகின்றது. இஸ்ராயேலர் கிரேக்கரின் அடக்குமுறைக்குள் வாழ்ந்து அவர்களுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்த காலம் இது. போரின் பின்னர், இறந்த இஸ்ரேலியப் போர்வீரர்களை அடக்கம் செய்ய யூதாவும் அவரது ஆட்களும் முயற்சித்தபோது அவர்களது கழுத்தில் 'அணியலாகாது என்று திருச்சட்டம் தடை செய்திருந்த, யம்மானியாவில் இருந்த சிலைகளின் அடையாளங்கள் கொலையுண்ட ஒவ்வொருவரிலும் ஆடைக்குள்ளும் தென்பட்டது.' (2 மக் 12 40). அதாவது இவர்கள் பிறதெய்வங்களின் தாயத்துகளை தமது பாதுகாப்புக்காக வைத்திருந்தார்கள். "இவ்வாறு தம்மைக் கறைபடுத்திக் கொண்டதாலேயே அவர்கள் கொலையுண்டனர் என்பது அவர்களுக்குத் தெளிவாயிற்று. எனவே அந்தப் பாவத்தை முற்றிலும் துடைத்தழிக்குமாறு வேண்டிய வண்ணம் மன்றாட்டில் ஈடுபட்டனர். "(2 மக் 12:42). மேலும் "யூதா அம்மக்களிடம் பணம் திரட்டி ஆறு கிலோ (2000 திராக்மா) வெள்ளியைச் சேகரித்து, இவ்வாறு பாவத்தோடு இறந்த போர் வீரர்களுக்காகப் பாவம் போக்கும் பலி ஒப்புக் கொடுக்கும்படி எருசலேமுக்கு அனுப்பி வைத்தார். இச்செயல் மூலம் உயிர்த்தெழுதலை மனதில் கொண்டு நன்முறையில், மேன்மையாக நடந்து கொண்டார். ஏனெனில் வீழ்ந்தோர் மீண்டும் எழுவர் என்பதை எதிர்பார்த்திருக்கவில்லை என்றால், அவர் இறந்தோருக்காக மன்றாடியது தேவையற்றதும் மடமையும் ஆகும். ஆகவே இறந்தவர்கள் பாவத்தினின்று விடுதலைபெறும்படி அவர் அவர்களுக்காகப் பாவம்போக்கும பல ஒப்புக்கொடுத்தார்." (2 மக் 12:43-45). இப்பகுதியானது இறந்தோருக்காக நாம் மன்றாடுவது, அவர்களுக்காகப் பலி ஒப்புக்கொடுப்பது அவர்களை பாவத்தின் கறைகளிலிருந்து விடுவித்து உயிர்த்தெழுதலுக்கு இட்டுச்செல்லும் வழியாக அமைகின்றது என்ற உண்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது.

3.1.2. சீராக் ஆகமம் (7:33) இந்நூலானது இறந்தோர் மட்டிலான கடமையை நாம் மறந்து விடக்கூடாது என்ற கருத்தை முன்வைக்கின்றது. "உயிர் நீத்தோருக்கும் அன்பு காட்ட மறவாதே." இது இறந்தோரை அடக்க செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி நிற்கின்றதெனினும் அவர்கள் மட்டில் நமக்கு இன்னமும் கடமைகள் உள்ளது என்பதையும் வெளிப்படுத்துகின்றது.

3.1.3. தானியேல் நூல்(12, 2-3) "இறந்துபோய் மண் புழுதியில் உறங்குகிற அனைவருள் பலர் விழித்தெழுவர். அவருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர்: வேறு சிலரோ வெட்கத்திற்கும் முடிவில்லை இழிவுக்கும் உள்ளாவர்." இது இறந்தோர் இறுதித் தீர்ப்புக்கு முன்னதாக இன்னொரு உலகில் அதாவது புனிதப்படுத்தல் உலகில் வாழ்வதையும் அவர்கள் முடிவில்லா வாழ்வுக்குச் செல்வதைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

3.1.4. யூத மத மரபில்: யூதமத மரபில் இறந்தவர் அனைவரும் கெகென்னா (Gehenna) என்ற துன்பம் நிறைந்த ஒரு உலகுக்குச் செல்வர். ஆனால் அங்குள்ள அனைவரும் அங்கேயே நிரந்தரமாகிவிடுவதில்லை. அவர்களுள் சிலர் அங்கு புனிதப்படுத்தப்பட்டு வெளியேறுகின்றனர் என்ற கருத்து நிலவியது. இதுவும் சில ஆன்மாக்கள் புனிதப்படுத்தப்பட்டு வெளியேறுகின்றனர் என்பதை வலியுறுத்துவதை நாம் கருத்தில் கொள்வது நல்லது.

3.2. புதிய உடன்படிக்கையில ஒருவர் இறந்தவுடன் உடனடியாக மோட்சத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றனர் என்ற கருத்து புதிய உடன்படிக்கை நூல்களில் அதிகம் இல்லை. ஆனால் இறுதித் தீர்ப்பு நாளிலேயே ஒருவர் மோட்சத்துக்கா அன்றேல் நரகத்துக்கா செல்வார் என்ற தீர்மானம் இயேசுவால் எடுக்கப்படுகின்றது. இறந்ததிலிருந்து இறுதித்தீர்ப்பு நாள்வரை அவர்கள் ஒரு உலகத்தில் வாழ்கின்றனர். அதனையே புனிதப்படுத்தல் உலகாகக் கொள்ளலாம்.

4. திருப்பலிச் செபங்களில் இறந்த விசுவாசிகள் அனைவருக்குமான திருப்பலி எண் 2 காணிக்கை மன்றாட்டானது பின் வருமாறு அமைகின்றது:



"இரக்கமுள்ள இறைவா, இறந்த உம் மக்களின் பாவங்களை இத் திருப்பலியின் வழியாகக் கிறிஸ்துவின் இரத்தத்தில் கழுவியருளும். திருமுழுக்கினால் நீர் தூய்மைப்படுத்திய இவர்களைத் தொடர்ந்து உமது பரிவிரக்கத்தால் உமக்கு உகந்தவர்களாக்கியருளும்." மேலும் மேலும் அதே திருப்பலிச் செபத்தின் நன்றி மன்றாட்டானது இவ்வாறு அமைகின்றது: "அவர்கள் பாஸ்கா மறை நிகழ்ச்சிகளால் முழுதும் தூயவராகி, உயிர்த்தெழும் மகிமையடைவார்களாக."

மேற்குறிப்பிட்ட இரண்டு செபங்களின்படி, இறந்த விசுவாசிகளில் இடம் பெறும் புனிதப்படுத்தலானது திருமுழுக்கில் ஆரம்பமாகி கிறிஸ்துவின் திரு இரத்தத்தால் கழுவப்படுதலில் நிறைவு பெறுவதைக் குறித்து நிற்கின்றது. அதாவது அவர்கள் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றில் வல்லமையால் புனிதமாக்கப்பட்டு உயிர்த்தெழுதலின் மகிமையை அடைகின்றனர்.

திருப்பலி எண் 3 இன் காணிக்கைமீதான மன்றாட்டில், "ஒப்பற்ற இப்பலியின் பயனாக இவர்கள் சாவின் தளைகளிலிருந்து விடுபட்டு, நிலையான வாழ்வு பெறுவார்களாக" என்ற பகுதி காணப்படுகின்றது இதன்படி இறந்த விசுவாசிகள் நிலைவாழ்வு பெறுவதற்கு அவர்கள் சாவின் தளைகளிலிருந்து அதாவது பாவத்தின் விளைவுகளிலிருந்து விடுதலை பெறுவது அவசியமாகின்றது.

(தொடரும்)



# "இறந்தோரை நினைத்து இறைவேண்டல் செய்வோம்"

#### முகவுரை

வருடாந்தம் கார்த்திகை மாதம் என்று சொன்னால், எமது மனக்கண் முன் வருவது சேமக்காலையும் கல்லறைகளுமே. இந்த நினைவுகளின் பின்னால், எம்மோடு வாழ்ந்து இறைபதம் அடைந்தோரை நினைத்து வேதனையோடு பெருமூச்சு விடுவதும், அவர்கள் எம்மோடு வாழ்ந்த பசுமையான நினைவுகளை மீட்டிப்பார்ப்பதும் வழக்கமாகும். இதனால் தான் எமது தாய்த்திருச்சபையானது வருடத்தில் கார்த்திகை மாதத்தை இறைபதம் அடைந்தோருக்காக ஒதுக்கீடு செய்து விசேடவிதமாக, இம்மாதத்தின் 2[ம்] நாளை "சகல ஆன்மாக்கள் திருவிழாவாக" அனுஸ்ரிக்கின்றது. இன்றைய நாளில் சேமக்காலையில் அனைத்து ஆன்மாக்களின் இளைப்பாற்றிக்காக விசேட திருப்பலி ஒப்புக் கொடுப்பதையும் கல்லறைகளின் முன்னால் ஒளியேற்றி செபிப்பதையும் நாம் வழக்கமாக கொண்டிருக்கின்றோம்.

#### உயிர்ப்பு நிச்சயமாக உண்டு:

"உடலின் உத்தானத்தை விசுவசிக்கின்றேன்" என்பது கத்தோலிக்க திருச்சபையின் விசுவாச சத்தியங்களில் ஒன்றாகும். "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்கு சொல்லுகின்றேன்" (லூக் 23:43) என்று நல்ல கள்வனுக்கு இறைமகன் இயேசு கூறிய வாக்குறுதி நிலைவாழ்வு (பேரின்ப வீடு) நமக்கு உண்டு என்பதை நினைவுபடுத்துகின்றது. "இறுதி நாளில் அனைவரும் உயிர்த்தெழும் போது அவனும் உயிர்த்தெழுவான் என்பது எனக்குத் தெரியும்" (யோவான் 11:23) என்று மார்த்தாள் இயேசுவிடம் சொன்ன வார்த்தையின் ஊடாக உயிர்ப்பு உண்டு என்பது தெளிவாகின்றது.

"இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு முடிவில்லா வாழ்தலை பற்றிய மறையுண்மைகளை சிந்திக்க வைப்பதோடு மறந்து விடக்கூடியவை எவை என்றும் நினைத்திருக்கக்கூடியவை எவை என்றும் நம்மை சீர்தூக்கி பார்க்க வைக்கின்றது" என்று திருத்தந்தை 23[ம்] யோவான் குறிப்பிடுகின்றார்.

#### இறைவாழ்வை எமதாக்குவோம்:

"நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம் கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்த பின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள் (யோவான் 14: 1-3) என்ற இறைவார்த்தைகளின் ஊடாக நிலைவாழ்வு உண்டு என்பதை ஆண்டவன் யேசு தெளிவாக எடுத்துக் கூறி இருக்கின்றார். நிலை வாழ்வை விசுவாசத்தோடு ஏற்றுக் கொள்ளும் நாம் மரணத்தின் ஊடாக எம்மை விட்டு பிரிந்து சென்றவர்களுக்காக செபிக்க கடமைப்பட்டுள்ளோம். எமது செபங்கள் மன்றாட்டுக்கள், திருப்பலிகள், ஒறுத்தல்கள், தான தருமங்கள் எல்லாம் உத்தரிப்பு நிலையில் உள்ளோருக்கு பாவமன்னிப்பை பெற்றுக் கொடுத்து நிலை வாழ்வை உரித்தாக்க வழி கோலுகின்றது."

#### நன்றியோடு நினைப்போம்:

இறைபதம் அடைந்தோரை விசேடவிதமாக நினைவு கூரும் இம் மாதத்தில் இவ்வுலகில் வாழுகின்ற இறை யாட்சிப் பயணம் மேற்கொள்ளும் வாழும் திருச்சபையாக இருக்கும் நாம் இறைபதம் அடைந்தோருக்காக விசேட விதமாக மன்றாடுவோம்.

எம்மை பெற்று வளர்த்து நிறைவாக அன்பு செலுத்தி தமது தியாகம் நிறைந்த வாழ்வில் எம்மை உயர்த்தி விட்ட அன்பு பெற்றோருக்காகவும் எம்மோடு உடன்பிறந்து அன்போடு உறவு கொண்டு வாழ்வின் சோகங்களையும் சுமைகளையும் எம்மோடு பகிர்ந்து வாழ்ந்த உடன்பிறப்புக்களுக்காகவும் செபிப்போம்.

அத்தோடு கண்டித்து கல்வி எனும் ஒளியேற்றி எம்மை சமூகத்திலே நற்பிரஜைகளாக உருவாக்கிய ஆசான்களுக்காகவும் ஆன்மீக வாழ்வில் எம்மை நெறிப்படுத்தி வழிநடத்திய ஞானப்பெற்றோர், ஞானத்தலைவர்கள் பங்குத் தந்தையர்களுக்காகவும் நன்றியோடு இறைவேண்டல் செய்வோம்.

யாரும் நினையாத அந்தரித்த ஆன்மாக்களுக்காவும் வன்னி மண்ணில் கொத்து கொத்தாக உயிர் பறிக்கப்பட்ட எம் உறவுகளுக்காகவும் கண்ணீர் சிந்தி நம்பிக்கையோடு மன்றாடுவோம்.

#### புனிதமாக வைத்திருப்போம்:

சேமக்காலையில் உள்ள கல்லறைகளில் எம்முன்னோர்கள் இறைவனுக்குள் அமைதியில் உறங்குகின்றார்கள் என்பதும், இறுதியில் இறைமகன் இயேசுவின் சாயலாக உயிர்த்தெழுவார்கள் என்பதும் நாம் ஏற்றுக் கொள்ளும் உண்மை என்று சொன்னால் சேமக்காலையை சுத்தமாகவும் புனிதமாகவும் பேண முன் வருவோம். அடிக்கடி கல்லறைகளை தரிசிப்பது எம் பெற்றோர்கள், உடன்பிறப்புக்கள், ஆசான்கள், ஆன்மீக தலைவர்கள் ஆகியோருக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாக அமையும்.

#### முடிவாக:

இறந்தவர்களை நினைக்கின்ற உன்னதமான இந்த மாதத்தில் எமது மரணத்தைப் பற்றி சிந்திக்கவும் விழிப்பாக இருக்கவும் நாம் இறைவனால் அழைக்கப்படுகின்றோம். எமது கல்லறை வாழ்வும் வெகுதூரத்தில் இல்லை என்பதை உணர்ந்து ஆன்மீக வாழ்வில் புனிதம் பேணி வாழ்ந்து எம்மையும் மரணத்துக்கு தயார்ப்படுத்த இறையருள் வேண்டுவோம்.

- இ. அ. அமலரட்ணம் -
பேராலயம்

**அறிந்ததும் அறியாததும்**

"இறந்துவிடுவோமோ என்று அஞ்சுவதைவிட இறந்தபின் இறைவனை விட்டுப் பிரிந்து விடுவோமோ என்பதை நினைத்து அஞ்சு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருசுவில் பங்கில்

# மீண்டும் புத்துயிர் பெற்று வருகின்றன பக்தி சபைகள்

நீண்டகால இடைவெளிகளுக்குப் பின் மீண்டும் புனித நீக்கொலார் ஆலயத்தில் பக்திசபைகள் புத்துயிர்பெற்று வருகின்றன.

பங்குமக்களின் உடல், உள தேவைகளையும், ஆன்மீக தேவைகளையும் பூர்த்தி செய்து பக்தியிலும், விசுவாச வாழ்விலும் ஊக்கம் கொண்டவர்களாக வாழ கடந்த 25-09-2010 அன்று பங்குத்தந்தை அருட்பணி. ம. பத்திநாதர் அடிகளார் அன்னையர்களுக்கான மாசில்லாத மாதாவின் சபையையும், சிறுமிகளுக்கான புனித. மரிய கொறெற்றியின் சபையையும் ஆசிவழங்கி ஆரம்பித்து வைத்தார். இச்சபையில் 10 அன்னையர்கள் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டார்கள். மாதாவின் கூட்டம் மாதத்தின் முதற்சனிக்கிழமைகளில் மாலை 4.00 மணிக்கு பங்குத் தந்தையின் தலைமையில் நடைபெறும் எனவும் வருடந்தோறும் மார்கழி மாதம் 8ᵃ திகதி வரும் மாசில்லாத மாதாவின் பெருவிழாவை இச்சபையினர் சிறப்பிப்பார்கள் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதன் அங்கத்தவர்கள் அன்னையின் புகழையும், பக்தியையும் வளர்ந்து, அன்னையிடம் விளங்கிய பண்புகளான தாழ்ச்சி, பொறுமை, கற்பு, கீழ்ப்படிதல், பிறர் சிநேகம் ஆகிய புண்ணியங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கும் பக்திச் சபையாக அமைந்து முன்னேறிச் செல்ல ஆலோசனை வழங்கினார்.

புனித மரிய கொறெற்றியின் வாழ்வானது நற்கருணையிலும், மரியன்னையிலும் மிகவும் பக்தியும், அன்பும் கொண்டு விளங்கியது போல இச் சபையும் புனித மரிய கொறெற்றியின் வாழ்வைப் பின்பற்றிய சபையாக உருவாக்கம் பெற வேண்டுமெனவும், புனித மரியகொறெற்றி தனது சிறிய வயதில் கற்பைப் பாதுகாத்து தூய்மையாக இறைவனுக்கேற்ற வாழ்வு வாழ்ந்தது போல சிறுவர்களாகிய இச்சபையினர் வாழ முயற்சி செய்ய வேண்டுமெனவும் அறிவுரை வழங்கினார். இவர்களுக்கான கூட்டம் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிறு மாலை 3மணிக்கு இடம்பெறும் எனவும், வருடந்தோறும் யூலை மாதம் 6ᵃ திகதி வரும் புனித மரிய கொறெற்றியின் திருவிழாவை இச் சபையினர் சிறப்பிப்பார்கள் எனவும் கூறினார். பங்கின் வளர்ச்சிக்கு பக்தி சபைகளின் செயற்பாடுகள் அவசியம் என வலியுறுத்தி நிறைவு செய்தார்.

ஜெவா திருநேசன் - மிருசுவில்

# அன்பின் கிறிஸ்தவ குடும்பம்

அன்பினால் தொடங்கி அன்பினால் உயிரோட்டம் பெறும் குடும்பம் பெற்றோர், பிள்ளைகள் ஆகியோர் உட்பட்ட ஓர் சிறு சமூகம் ஆகும். இவர்கள் அன்புப் பிணைப்பினால் கட்டுண்டு வாழ்கின்றனர். இப் பிணைப்பின் நோக்கம் அன்பே ஆகும். அன்பில்லாத குடும்பம் ஓர் சமூகம் அல்ல.

இறைவனுக்கும் மக்களுக்குமிடையில் உள்ள அன்பின் உறவு கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் உள்ள உறவின் அடையாளம் ஆகும். கிறிஸ்து திருச்சபைக்காக சிலுவையின் மீது செய்த உயிர்ப்பலியில் கிறிஸ்தவ குடும்பத்தின் அன்புப் பிணைப்பு முழுமை பெறுகின்றது.

கிறிஸ்தவ குடும்பமானது திருமணம் அல்லது மெய்விவாகம் எனும் திருவருட்சாதனம் மூலம் ஆரம்பமாகின்றது. "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று என நினைத்த கடவுள் அவனுக்கு தகுந்த துணையை உருவாக்குவேன் என்றார்" இவ் அருட்சாதனத்தை பெற்றுக் கொள்ளும் ஆண் தனது தாய், தந்தையை விட்டு மனைவிக்கு அன்பு செய்கின்றான். இருவரும் ஒரே உடலாக மாறுகின்றனர்.

கிறிஸ்தவ கொள்கையின்படி குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைகள் இறைவனின் கொடைகளாகும். எனவே பிள்ளைகளின் உடல், உள, ஆன்ம வளர்ச்சிக்காக உழைக்கும் பொறுப்பு பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுகின்றது. வயதான பெற்றோரை பராமரிக்கவும், பெற்றோரது அறிவுரைக்கு ஏற்ப நடக்கும் கடமையும் பிள்ளைகளுக்கு உரியது. பெற்றோர் மட்டில் அன்பு, மரியாதை, கீழ்ப்படிதல் என்பன கிறிஸ்தவ குடும்பம் ஒன்றை கட்டியெழுப்புவதில் பிள்ளைகள் மட்டிலுள்ள பங்களிப்பின் பண்புகளாகும். அன்பை அடிப்படையாக கொண்ட கிறிஸ்தவ குடும்பம் தியாக சிந்தை உடையதாகும். பிறர்நலம், மன்னித்தல், ஒற்றுமையைப் பேணுதல் போன்ற பண்புகள் கிறிஸ்தவ குடும்பத்தில் கட்டாயம் இருக்க வேண்டியவை ஆகும்.

எம் கிறிஸ்தவ குடும்பங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக விளங்குவது திருக்குடும்பம் ஆகும். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் உரிய புரிந்துணர்வும், உறவும் இருக்கும் போது குடும்ப வாழ்வினால் சமூகமே அழகு பெறும்.

எனவே திருக்குடும்பத்தை பின்பற்றி நவநாகரீகங்களை தவிர்த்து ஆன்மீக நெறியில் நாம் வளர்ந்து அன்பில் இணைந்த குடும்பங்களாக எம் குடும்பங்களை உருவாக்குவோம்.

இ. தர்சினி
புனித யாகப்பர் பங்கு

# அனுபவப் பகிர்வு

யாழ். மரியன்னை பேராலயம்

நாம் சென்ற வெள்ளிக்கிழமை 22-10-2010 அன்று அனுபவப்பகிர்வுக்காக தர்மபுரம், விசுவமடு, ரெட்பானா எனும் ஊர்களுக்குச் சென்றிருந்தோம். அது எனக்கு மிகவும் அனுபவபூர்வமாகவுள்ளது. நாங்கள் தர்மபுரம் எனும் ஊருக்குச் சென்றிருந்த பொழுது அங்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களையும், இடம் பெயர்ந்தோரையும் சந்தித்தோம். அவர்களுடன் அனுபவப் பகிர்வை மேற்கொண்டோம். அவர்கள் இடம் பெயர்ந்து தர்மபுரம் ஊரில் குடிசைகளை கட்டி வாழ்ந்துகொண்டிருந்தனர். அன்று நாங்கள் ஒரு பெரிய வரைக் கண்டோம். அவருக்கு வன்னியில் நடந்த யுத்தத்தினால் ஒரு கால் இல்லாமல் போய் விட்டது என எங்களுக்கு கூறினார். பின் நாங்கள் ஒரு குடும்பத்தைக் கண்டோம். அவர்கள் நாங்கள் யுத்தத்தினால் எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்துவிட்டதாக கூறினார்கள். நாங்கள் இப்பொழுது ஒரு குடிசையில் தங்கியிருப்பதாக கூறினார்கள். பின்பு நாங்கள் நான்கு சகோதரர்களை கண்டோம். அவர்களுக்கு பெற்றோர்கள் யுத்தத்தினால் இறந்து விட்டனர் என கவலைப்பட்டு கூறினார்கள். எங்களுக்கும் மிகவும் கவலையாக இருந்தது. இன்னும் பலரின் கதைகளைக் கேட்க ஆசிரியருடன் சென்று அனுபவப் பகிர்வு மேற்கொண்டோம். நாங்கள் எம் வயதிலுள்ள சிறுவர்களுக்கு ஆறுதலையும் கூறிவிட்டு பேருந்தில் வந்து ஏறினோம்.

நாங்கள் அனுபவ பகிர்வுக்காக முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற ஊர்களுக்கு சென்றோம். அங்கு பல மக்கள் அநாதையாக தந்தை, தாய், உறவினர்கள், சகோதரர்கள் போன்றவர்களை பார்த்தோம். அவர்களை பார்க்கும் போது அவர்கள் பல கஸ்ரங்களை கடந்திருக்கின்றார்கள் என்று அறிந்தோம். நாங்கள் அவர்களுக்கு உணவுப் பொருட்கள், கொப்பி, பேனா, பென்சில் போன்றவற்றை கொடுத்த போது அவர்களுக்கு சந்தோசமாக இருந்ததை பார்த்தோம். அது மட்டுமல்ல ஒரு நல்ல நண்பர், நண்பி கிடைத்ததென்று சந்தோசப்பட்டதை கண்டோம்.

# 31-08-2010 இயேசு மரியின் அன்பின் சகோதரிகள் சபை ஸ்தாபகரின் 250 ஆவது ஜெந்ததினம் கார்த்திகை 04 சபை ஸ்தாபகதினம்

ஆக்கம் : அருட்சகோதரி நிக்கலா கல்யாணுவேல்

## அருட்திரு பீற்றர் யோசப் றீஸ்ற், அடிகளார்

பீற்றர் யோசப் றீஸ்ற், யோவண் றீஸ்ற்றுக்கும் சிசிலியா பெலோவுக்கும் 9ᵃᵛᵃ பிள்ளையாகப் பெல்ஜியத்திலுள்ள பிறசில் என்ற இடத்தில் 1760-08-31ᵃ பிறந்தவர். அடுத்த தினமே பெல்ஜியம் புனித நீக்கிலார் ஆலயத்தில் திருமுழுக்குப் பெற்றார். இவரது குடும்பம் 14 பிள்ளைகளைக் கொண்டது.

### குருவும் பணிவாழ்வும் :

1772ல் இயேசுசபை புனித மைக்கல் கல்லூரியில் தனது படிப்பைத் தொடங்கினார். 1776ல் பெல்ஜியத்தில் கீல் என்ற இடத்தில் இலத்தீன் பாடசாலையில் கல்வி கற்கச்சென்றார். அந்தக் கிராமத்து மக்கள் மனநோயால் பாதிக்கப்பட்ட மக்களைத் தங்கள் வீடுகளில் வைத்துப் பராமரித்து வந்தார்கள். றீஸ்ற் தனது ஓய்வு நேரங்களில் இந்த மக்களைச் சந்தித்து உதவி செய்தார். இதுவே பின்பு அவர் இம்மக்களுக்காகத் தன்னை அர்ப்பணிக்க வழி சமைத்தது. பெல்ஜியத்திலுள்ள லூவேயின் பல்கலைக்கழகத்தில் அவரின் சகோதரரோடு 1780ல் இணைந்து மெய்யியல் கல்வியை ஆரம்பித்து 1782ல் குருவாக விரும்பி தம் சகோதரரோடு மிச்செலென் கல்லூரியில் இறையியல் படிப்பதற்காக இணைந்தார். 1786 6ம் மாதம் 10ம் திகதி அவரது சகோதரருடன் திருநிலைப்படுத்தப்பட்டார். 1788ல் டைல் பங்கில் உள்ள




தேவதாயின் ஆலயத்தில் பங்குத் தந்தையானார 1791ᵃ காலஸ்விக் என்ற பங்கில் பங்குக் குருவானார். இந்த நாட்களில் ரைவஸ் என்னும் தொற்று நோய் பரவியது அருட்தந்தை றீஸ்ற் வைத்தியசாலையில் நோயாளரைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டார். அதனால் அவரும் தொற்று நோயால் பீடிக்கப்பட்டார். ஆனால் இறைவன் அவரை மரணத்திலிருந்து காப்பாற்றினார்.

### பிரான்சியப்புரட்சி :

1792ᵃ பிரான்சியப் புரட்சிப் படையினர் பெல்ஜியத்தில் நுழைந்தனர் 1795ᵃ பெல்ஜியம் பிரான்சுடன் இணைக்கப்பட்டது. 1797ᵃ பிரான்சியப் புரட்சி தலை தூக்கியது. றீஸ்ற் அடிகள் ஜெரான்ஸ் நகரின் பங்குக்குருவாக நியமிக்கப்பட்டார்.

(தொடர்ச்சி அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்)

# புனித பவுஸ்தீனா திருவிழா

"இன்று நாம் விழாவெடுக்கும் புனித பவுஸ்தீனாவின் வாழ்க்கை மிகவும் புனிதமானது. பூர்ச்சியமானது. அவளின் வாழ்க்கை முழுவதும் செபவாழ்க்கை. கொடிய நோயையும் பாராது இறைமகன் இயேசு கொடுத்த அனைத்துக் கட்டளைகளையும் வேண்டுகோள்களையும் தயங்காது தாழ்ச்சி மனப்பான்மையோடு நிறைவேற்றினார். படிப்பறிவு இல்லை. ஆனால் பரமன் கட்டளைகளை பேராவலுடன், எதையும் தாங்கும் இதயத்துடன், பணிவுடன் நிறைவேற்றினார். ஏழை நெருசம், எளிமை வாழ்க்கை, இறை சிந்தத்திற்குப் பணிந்துபவம். இவளின் இதய பூர்வமான, ஆக்கபூர்வமான செயல்பாடுகளின் காரணமாகத்தான் இன்று நம் நாட்டிலும், அனைத்துலகிலும் "இறை இரக்கப்பக்தி" வேரோடியுள்ளது. இயேசுவின் வார்த்தைகளை எப்படி செவி மடுத்து செயல்படுத்தினாரோ, அவ்வாறே நாமும், நம் வாழ்க்கையில் இறை இயேசுவின் வார்த்தைகளுக்கு செவி கொடுத்து செயல்படுத்தி, இறை இரக்கப் பக்தியை முன்னெடுக்க வேண்டும்" என்று விழாத் திருப்பலி நிறைவேற்றிய அருட்பணி செப மாலையூட்டன்



அலன் IVD அடிகளார் மறையுரையில் குறிப்பிட்டார். திருப்பலிக்கு முன்னதாக, இறை இரக்கச்செபம், செபமாலை, மன்றாட்டுக்கள் ஓதப்பட்டு, நற்கருணை ஆசீரை அருட்பணி பாரத் வில்லவராயன் அமதி அடிகளார் வழங்கினார்.

இப்பெருவிழா சென்ற வருடம் போன்று கொட்டாஞ்சேனை, புனித லூசியா பேராலயத்தில் ஐப்பசி 5ᵃ திகதி கொண்டாடப்பட்டது.

இப்பெருவிழாவிற்கு கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து பங்கு மக்களும், இறை இரக்கப் பக்திச் சபையினரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மோ. தார்சிசியஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர் யோசவாஸ் அடிகளாரின் விண்ணக வாழ்வின் மூன்றாம் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை ஆயர் பேரவை விடுக்கும் சுற்றுமடல்

(சென்ற இதழ் தொடர்ச்சி)



ஏந்த ஆபத்தையும் எதிர்கொள்ளும் மனநிலையோடு தன்னுடைய ஆடுகளைத் தேடிச் செல்லும் ஒரு ஆயனாகவே அருளாளர் யோசவ்வாசும் தம்மைக் கண்டு கொண்டார். ஏனையோருக்கு அவருடைய பணி நிறைவேற முடியாத கனவு போன்றே தோன்றியது. ஆனால் அவரோ நடைமுறைச் சாத்தியமற்றதாகத் தோன்றும் இப்பணிக்கு தன்னை அழைத்த இறைவன் தன்னைப் பாதுகாத்து நிலை நிறுத்தினார் என்பதை அறிந்தே இருந்தார். அவர் தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றினார். கடுமையான ஆபத்துக்களிலும், சோதனைகளிலும் அவர் தளரவில்லை. தனது சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்வதில்லை என்ற உறுதியோடு தான் அவர் இலங்கைத்தீவில் கால் பதித்தார். தன்னுடைய சக மறைப்பணியாளரும் அவ்வாறே செய்ய வேண்டும் என விரும்பினார். ஒரு நல்ல ஆயன் ஒரு போதும் தன்னுடைய மந்தையை கைவிடுவதில்லை என அவர் நம்பினார். பல்வேறு வேடங்களில் வெவ்வேறு பணித்தளங்களுக்கு இரவு பகலாக நடந்தே சென்ற அவர் தன்னுடைய நலனை நோக்காது சிதறுண்ட துன்புறும் தன்னுடைய மக்களுக்கு பணிபுரிவதிலேயே காத்திருந்ததை நாம் காணுகின்றோம். அவருக்கு அதிகம் பொருத்தமானதாகவும் பழக்கமானதாகவும் காணப்பட்டது பிச்சைக்காரன் வேடமேயாகும். ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் ஒல்லாந்தப் படைவீரனின் பிடியில் சிக்கக்கூடிய ஆபத்தின் விளிம்பில் அவர் இருந்த போது இறைபராமரிப்பு புதுமையான விதத்தில் தன்னுடைய ஊழியனை பாதுகாத்தது. அருளாளர் யோசவாஸ் அடிகளாரின் சக பணியாளனாகிய அருள்பணி பெதிரோ டா சல்டானா 1705ல் பின்வருமாறு எழுதுகின்றார். "என்னுடைய மேலாளரும் தந்தையுமான வணக்கத்துக்குரிய யோசவாஸ் இரவு பகலாக ஆண்டவருடைய பணியில் ஈடுபடுகின்றார். கீழ்ப்படிதலின் பொருட்டு கட்டளையிடப்படும் சந்தர்ப்பங்கள் தவிர தானாக விரும்பி அவர் ஓய்வு எடுப்பதை காண முடியாது. இரவு வேளையிலே குறைந்த நேரம் தான் துயில் கொள்கின்றார். தூரப் பணித்தளங்களுக்கு அடிக்கடி பயணம் செல்லும் அவர் அவ்வேலை முடிந்ததும் உடனடியாகவே கண்டி திரும்பி கண்டி இராட்சியத்தின் வேலை நிறைந்த பகுதிகளுக்கு சந்திப்புக்களை மேற்கொள்ள புறப்பட்டு விடுவார். மலைகளில் ஏறி பள்ளத்தாக்குகளில் இறங்கி நீண்ட பயணங்களை மேற்கொள்வதும், இன்னும் எண்ணிக்கையற்ற ஏனைய வசதியீனங்களும் அவருடைய பணியார்வத்தை குறைக்கவில்லை. அவர் தொடர்ந்து ஆர்வத்துடன் பணி புரிந்தார். இத்தகைய வசதியீனங்கள், கரங்கள் பற்றியோ அல்லது நாங்கள் தங்கியிருந்த ஆலயம் அமைந்திருந்த பகுதியில் நிலவிய கடுமையான குளிர் பற்றியோ அவர் ஒரு வார்த்தை பேசியதை நான் எப்போதுமே கேட்டதில்லை. தனக்கிருந்த ஆயிரம் வேலைகள் மத்தியிலும் ஒவ்வொரு நாளும் சிறிதளவு சிங்களமும் தமிழும் வாசிக்க நேரம் கண்டு பிடித்து விடுவார்." (VPD pl g. 271)

கண்டி நகரை சின்னமுத்து ஒரு கொள்ளை நோயாக தாக்கிய சந்தர்ப்பத்தில் தான் அருளாளர் யோசவாஸ் ஒரு வீரம் செறிந்த தளர்வற்ற ஆயனாக மேலெழுந்தார். 1697ம் ஆண்டின் நடுப்பகுதியில் தான் இந்த கொள்ளை நோய் பரவத் தொடங்கியது. இது மரணத்தை கொண்டு வரும் கொடிய நோய். பாதிக்கப்பட்டவரின் உறவுகள் கூட நகரை விட்டு ஓடி விட்டனர். இறந்து போன உடலங்கள் எங்கும் சிதறுண்டிருந்தன. நோயாளிகள் கவனிப்பாரற்று கைவிடப்பட்டிருந்தனர். அது ஒரு பேயுலகம் நகர் போலானது. அருளாளர் யோசவாசும் அவருடைய உறவினராகிய அருள்பணி யோசவ் கர்வாலோவும் பிரமாணிக்கமுள்ள பணியாளனாகிய யோனும் எவ்வித தயக்கமுமின்றி உடனடியாகவே வேலையில் இறங்கினர். நோயாளிகளில் பலர் காடுகளிலும் கைவிடப்பட்டிருந்தனர். அவர்களையும் அவர் தேடிச்சென்றார். சில தற்காலிகக் குடில்களை அமைத்து அங்கு அவர்களைத் தங்க வைத்தார். நோயாளிகளுக்குத் தேவையான உணவு, உடை, மருந்து போன்றவற்றை எடுத்துக் கொண்டு தினமும் இரு முறை அவர்களைச் சந்திக்கச் சென்றார். அந்தப் பயங்கரமான நோய் தமக்கும் தொற்றி விடுமோ என்ற எவ்வித பயமுமின்றி ஒவ்வொரு நோயாளியையும் தாமே கழுவி, புண்களுக்கு மருந்திட்டு அவர்களை இயன்றவரை வசதியாக உணரச் செய்தார். ஒரு வருடத்தின் பின் அந்தக் கொள்ளை நோய் முற்றிலுமாக நீங்கியதுவரை அவர் அந்தக் கடமையை தொடர்ந்து செய்தார். வீரம் செறிந்த உன்னதமான இந்த முன்னுதாரணம் தான தன்னுடைய பரிவாரங்களோடு நகரை நீங்கியிருந்த அரசன் 2ம் விமல தர்ம சூரியன் உட்பட பலருடைய மனங்களை தொட்டது.

1710ம் ஆண்டளவில் அடிகளாருடைய பணி முடிவுக்கு வரத்தொடங்கியது. அப்போது குருமுதல்வராகவும், மேலாளராகவும் நியமிக்கப்பட்டிருந்த அருள்பணி யக்கோமே கொன்சால்வஸ் அடிகளாரின் அழுத்தம் குறைந்து வந்த அவருடைய ஆரோக்கியம் இவற்றின் மத்தியிலும் ஓய்வு பெறுவதை அடிகளார் கற்பனை பண்ணிக்கூட பார்க்கவில்லை. தன்னுடைய வேதனை தரும் உடல் நிலையோடும் கண்டியிலிருந்து ஒரு நாள் பயணத்தூரத்தில் இருந்த கிராமம் ஒன்றிலிருந்து வந்த நோயாளி ஒருவருடைய அழைப்பை இவர் ஏற்றுக் கொண்டார். நடக்க முடியாத நிலையில் இருந்தபடியால் அவர் காவிச் செல்லப்பட்டார். திரும்பி வரும் வழியில் அவரைக் காவிச் சென்றவர்கள் ஒரு மலைச் சாரலில் இறங்கிக் கொண்டிருந்த போது அடிகளார் தவறுதலாக பல்லக்கிலிருந்து கீழே விழுந்து விட்டார். பின்பு அவர் தன்னுடைய மரணத்தை எதிர்கொள்ள ஆன்மீக ரீதியில் தயாரானார்.

1711ம் ஆண்டு ஜனவரி 16ம் திகதியில் தன்னுடைய சக மறைப்பணியாளர் புடைசூழ விசுவாச உச்சாடனத்தை மீள மீளச் சொன்னவராக தன்னுடைய ஆன்மாவை இறைவனுடைய கையில் ஒப்படைத்தார். இவ்வாறு தான் இலங்கையில் அவருடைய பணிக்காலத்தின் 27வது ஆண்டில், அவருடைய குருத்துவ வாழ்வின் 35வது ஆண்டில் அவருடைய அறுபதாவது அகவையில் ஒரு ஆர்வம் மிக்க மறைப்பணியாளரின் ஒப்புயர்வற்ற மகிமைமிக்க தீரம் நிறைந்த மறைப்பணி வரலாறு ஒரு முடிவுக்கு வந்தது.

(தொடரும்)

# சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக போற்றப்பட வேண்டிய உத்தமர்களே முதியவர்கள்

அருட் சகோ. றமேஸ் அ.ம.தி



ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் தனி மதிப்பையும், ஆழ்ந்த அனுபவத்தையும் பெறும் ஓர் உயரிய நிலைதான் முதுமை. வியாபார உலகில முதுமை நம் கண்களுக்கு பாரமாகத் தெரியலாம். ஆனால் ஆழ்ந்து சிந்தித்தால் பெரியவர்கள், தம் வாழ்க்கையில் பெற்ற எண்ணற்ற அனுபவங்கள் சோதனைகள், சாதனைகள் ஆகியவற்றை வார்த்தைகளால் கூறமுடியாது. "முதியோருக்கு பெருமை தருவது அவர்களது நரைமுடி" (நீ.மொ 20:29) என்று குறிப்பிடும் நீதிமொழிகள் நூல் முதியவர்களின் தோற்றமே அவர்களது வாழ்வைப் புலப்படுத்தும் காரணி என்று விளக்கம் தருகிறது. "முதியோருக்கு ஞானமும் மாண்புடையோருக்கு சிந்தனையும் அறிவுரையும் எத்துணை சிறந்தவை" (சீ.ஞா 25:5) உலகம் தோன்றிய காலம் முதல் இன்று வரை முதியவர்களுக்கு தனி அந்தஸ்தும் மரியாதையும் வழங்க சமுதாயம் ஒருபோதும் மறந்ததில்லை. ஆனால் இன்று எமது நிகழ்கால வாழ்வில் முதியவர்களின் நிலை என்ன என்று சிந்தித்து செயற்பட வேண்டியது ஒவ்வொருவரினுடையதும் முக்கிய பொறுப்பாகும்.

"நீண்ட நாள் வாழவேண்டும் என்று எனக்கு விருப்பமில்லை. நாட்டுப் பணிக்காக என் உயிரைத் துறப்பதில் பெருமைப்படுகின்றேன். இன்று நான் இறந்தாலும் எனது ஒவ்வொரு சொட்டு இரத்தமும் நாட்டின் வளர்ச்சியை அறிமுகப்படுத்துமே" என்று கூறிய அன்னை இந்திராவைப் போல, குடும்பத்துக்காக, சமுதாயத்திற்காக, நாட்டிற்காவென தம் வாழ்நாள் முழுவதும் உடல்வருத்தி உதரம் சுருக்கி, உதிரம் சிந்தி உழைத்து இன்று தங்கள் வாழ்வில் ஓர் நிறைவை அடைந்து இளைப்பாறும் எம் முதியவர்கள் மரியாதை செலுத்தப்பட வேண்டியவர்கள், கவனிக்கப்பட வேண்டியவர்கள். "நரை திரண்டவருக்கு முன் எழுந்து நில், முதிர்ந்தவர் முகத்தை மதித்து நட" (லேவி 19:32). "நடமாடும் தெய்வம்" என்று வர்ணிக்கப்பட்ட அன்னை தெரேசாவைப்போல முதியோர்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஊடகமாக நாம் முன்வரவேண்டும். இன்று எமது சமுதாயத்தில் நடப்பதுதான் என்ன?

இளமைத்துடிப்பிலே இலயித்துப் போய், இளமையே முதுமைக்கு முதற்படி என்பதை மறந்துபோய், பெற்றோர், பெரியோர், முதியோர்களை பராமரிப்பின்றி படுகுழியில் தள்ளிவிடும் நவீனத்துவ காலச்சாரத்தில் வாழும் மனிதநேயமற்ற சமுதாயத்தையே நாம் நாளும் சந்திக்கிறோம். கூடப்பயணிக்கிறோம். எங்களுக்கு வாழ்வு தந்து தங்கள் வாழ்வில் கூனிக்குறுகி, ஊன்றுகோலில் தொங்கித் திரியும் பெற்றோரை, பாரமாகக் கருதுபவர்கள் பலர். நடக்கவே வலிமையற்று வீட்டின் மூலையில் தஞ்சம் தேடும் முதியவர்களை நச்சரித்து, வீதியோரத்தில் பிச்சைக்கு அமர்த்தி அதன்மூலம் தன் வயிறு கழுவும் மனிதநேயமற்ற, பெற்றோர் பாசமற்ற மனிதர்கள்கூட எம் நடுவே உண்டு. தங்கள் அந்தஸ்து கௌரவத்தால் பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் அமர்த்திவிட்டு, தங்கள் இறுதிக்கடமைகள் அனைத்துமே முடிந்துவிட்டது என்றெண்ணி வாழும் மனிதர்களையும் நாம் காணாமல் இல்லை. எமது வீட்டைக்காக்கவும், குழந்தைகளை பராமரிக்கவும், பெற்றோர்களை பயன்படுத்தும் அதே வேளையில் அவர்களது இயலாமையில் அவர்கள் வேதனைப்படும்போது அவர்களை பாரமாகக் கருதி அவர்களை வேதனைக்குட்படுத்தும் பிள்ளைகளாகத் தான் இன்றைய சமுதாயம் காணப்படுகிறது. இதனால்தான் "...முதியோர்களையும் அவர்கள் மதிக்கவில்லை" (புல 5:12) என்று அன்றே இயம்பினார் புலம்பலாகமம் ஆசிரியர். ஆனால் பெற்றோர்களே தங்கள் கண்கண்ட தெய்வங்கள் என்று தங்கள் வாழ்வில் அவர்களுக்கே முதலிடம் கொடுக்கும் மிகச்சில மக்களால்தான் இன்றும் உலகிற்கு சில நன்மைகள் கிடைக்கின்றன என்றால் மிகையாகாது.

"இளைஞர்களே, நீங்கள் முதியவர்களுக்கு பணிந்திருங்கள்..."(1பேது 5:5) என்று அறிவுறுத்துகிறார் புனித பேதுரு. இன்று முதியவர்களின் வார்த்தைகளை வாழ்வாக்க தயாராக இருப்பவர்கள் நம்மில் எத்தனைபேர்.? மாறாக முதியவர்களே பாரம் எனக் கருதி சமுதாயத்தில் முதியோர் இல்லங்களை உருவாக்குபவர்கள் தான் பலராயுள்ளனர். முதியவர்கள் தொடியிலே தேடப்படாது கிடக்கும் வெறும் சடங்கள் அல்ல பயன்பாட்டின் பின்னர் சமுதாய சாக்கடையிலே பரிதாபமாக வீசப்படும் பகடைக் காய்களுமல்ல. மாறாக உயர்ந்தவர்களாய், உத்தமர்களாய் சமுக வளர்ச்சியினை நிர்ணயிக்கின்ற பலம் வாய்ந்த தூண்களே இவர்கள். இந்த உண்மையை உணர்ந்தவர்களாய் "முதியோரின் உரைகளை புறக்கணிக்காதே அவர்களும் தங்கள் முன்னோரிடமிருந்தே கற்றுக்கொண்டார்கள்" (சீ.ஞா 8:9) என்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னில் தானே தெளிவு பெறவேண்டும். எமது பெற்றோரும், உற்றோரும், மற்றோரும் முதுமை நிலையை அடையும் போது அவர்களை எமது ஆசீர்வாதமாக கொள்ள வேண்டும். முதியோர்கள் மட்டிலான எமது கரிசனைகள் வார்த்தைகளவில் மட்டும் நின்றுவிடாது எமது அன்றாட வாழ்விலும் அது விளங்க வேண்டும். முதியவரை மதிப்போம்போம் அவர்களை மகிழ்ச்சிப் படுத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் ஆயரின் ஆசிச் செய்தி

– பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் யாழ் ஆயர் –



பொது நிலையினரின் பொற்காலம் என்று அழைக்கப்படும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பிற்காலமாகிய இன்று பொதுநிலையினரின் வாரம் அனுசரிக்கப்படுவது ஒரு முக்கியமான நிகழ்வாகும்.

எம் மறைமாவட்டத்தில் பொதுநிலையினரின் பணிகள் முடுக்கி விடப்பட்டு கிறிஸ்தவ சிறு குழுமங்கள், அன்பியங்கள் மூலம் கிறிஸ்தவ குழும வாழ்வு அபிவிருத்தி பெறும் பொழுது பொது நிலையினர் சிறப்பாக கிறிஸ்தவ பணியில் முதிர்ச்சி பெறுகின்றனர். எனவே எமது மறைமாவட்டத்தில் அன்பியங்கள் மேலும் மேலும் வளர்ந்து பொதுநிலையினரின் பணிகளுக்கு உந்து சக்தியாக விளங்க இறைஆசீர் கூறி பொது நிலையினர் கழகத்தின் இயக்குநர், தலைவர், செயலர் உறுப்பினர் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# சிந்தனைத் தெளிவும் செயல் திறனும் காலத்தின் தேவை

கிறிஸ்தவத்தை மீளமைக்க திருத்தந்தை எடுக்கும் மிகப் பெரும் முயற்சியில் பொதுநிலையினராகிய எமக்கும் பெரும் பங்களிப்பு உண்டென்பதை நாம் ஒவ்வொருவரும் காலத்தின் கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். பொதுநிலையினராகிய நாம் உப்பாக, ஒளியாக (மத் 5:13–16) மனிதர் முன் ஒளிர வேண்டும் என்றால் நாம் கொண்ட விசுவாசம் நம்பிக்கையை வாழ்வாக்க வேண்டியதும் செயலாக்க வேண்டியதும் எம் ஒவ்வொருவரின் பொறுப்பாகும். (யாக்கோபு 2:17)

இவ்வாறு நாம் வாழ முற்படும் போது பல்வகையான துன்பங்கள், சிலுவைகள் எம்மை வந்து சேரும். இத்தகைய சிலுவைகளை நாம் சுமக்காமல் இறைவனைப் பின் செல்ல முடியாது. அவருடைய சீடராக இருக்கவும் முடியாது (லூக் 14:27) என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டு எம்மாலான பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு நாம் தனியாக, குடும்பமாக, சிறு குழுமங்களாக, பங்காக இறைவனை ஆழமாக அன்பு செய்வதும் அதன் மூலம் அவரின் அழைப்பைப் பெற்றவர்களாக எம்மிடமுள்ள அன்பு, அறிவு, பணம், பொருள் ஆகியவற்றை இல்லாதவரோடு பகிர்ந்து வாழும் போது அறிவெல்லாம் கடந்த இறை அமைதி (பிலி4:7) எம் உள்ளத்துக்கும், சமூகத்திற்கும், தாய்த் திருச்சபைக்கும் கிட்டும் என்பது நிதர்சனமானது. இதுவே இவ்வாண்டுக்கான பொது நிலையினர் தினத்தில் எமது நினைவாகக் களாக இருக்கட்டும்.

செல்வி. நந்தினி ஆசைப்பிள்ளை,
கொய்யாத்தோட்டம்.

# "உணர்வோம் உயர்வடையச் செய்வோம்"

அன்னையாம் திருச்சபையானது திருநிலையினர், பொதுநிலையினர் என இருவகை நிலையினரையும் தன்னகத்தே கொண்டு கிறிஸ்துவால் ஆசீர்வதிக்கப்பட்டு தூய ஆவியின் வழிநடத்தலால் இயக்கப்படுகின்ற இறைமக்கள் சமூகமாக மிளிர்கின்றது. உடல் ஒன்றே உறுப்புகள் பல அவ்வாறே கிறிஸ்துவை தலைவராகக் கொண்ட அவரது மறையுடலாகிய ஒரே திருச்சபையில் நாம் உறுப்புக்கள் போன்று பலராக இருக்கின்றோம். உடல் சீராக இயங்க வேண்டுமாயின் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் தமக்கென உரித்தான பணியைச் செயற்படுத்த வேண்டும். (1கொரி 12:12) என்ற பவுல் அப்போஸ்தலரின் சிந்தனைக்கு அமைவாக பன்மத சூழலில் வாழும் எமது திருச்சபையை உலகில் பிரகாசிக்க செய்ய வேண்டுமாயின் பொது நிலையினராகிய எமக்குத் தரப்பட்டுள்ள பொதுக்குருத்துவப் பணியினை சரிவர நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் திரு முழுக்கின் மூலமாக பொதுக் குருத்துவப் பணியினை தமதாக்கிக் கொள்கின்றான் என்ற இரண்டாம் வத்திக்கான் சங்க இறையியல் சிந்தனையை நாம் மறந்து விடலாகாது.

பொதுநிலையினர் தினத்தில் பொதுநிலையினராகிய நாம் எமது பொது நிலையினர் திருத்தூதுப் பணியில் எந்தளவிற்குப் பங்களிப்பு உள்ளவர்களாக இருக்கின்றோம் என உணர (சிந்திக்க) அழைக்கப்பட்டுள்ளோம். திருச்சபையின் வளர்ச்சியில் எனது பங்கு எந்தளவிற்கு இருக்கின்றது? பார்வையாளராகவா? அல்லது பங்காளியாகவா? என்பதைப் பற்றி ஒரு தடவை ஒவ்வொரு பொதுநிலையினரும் மீளாய்வு செய்யக் கடமைப்பட்டுள்ளோம். எமது திருச்சபை பன்மத, பண்பாட்டு சூழலில் வாழ்ந்து வருகின்றது. ஆகவே எமது திருத்தூதுப்பணியினை மேற்கொள்ளும் போது பல சவால்கள் எம் கண்ணெதிரே, தடைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து பொது நிலையினரின் திருத்தூதுப் பணியில் எவ்வித பேதமுமின்றி அனைவரும் ஒரே குழுமமாக, கழகமாக, சமூகமாக ஒரு பாக, உலகின் ஒளியாக எமது கத்தோலிக்க திருச்சபையை முன்னேற்றப் பாதையில் உயர்வடையச் செய்வோம் என இன்றைய நாளில் உறுதி பூணுவோமாக.

"நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு!" (1கொரி 9:16) எனும் திருத்தூதர் பவுலின் வார்த்தை அனைத்துப் பொதுநிலையினர் இதயத்திலும் எதிரொலிக்க வேண்டும்.

திரு. எஸ் கே. யூட்பெனடிற்
செயலாளர்
இளவாலை மறைக்கோட்ட கத்தோலிக்க
பொதுநிலையினர் கழகம்

# திருச்சபையில் பொதுநிலையினர் புளிக்காரம் போல....

2010ஆம் ஆண்டு பொதுநிலையினர் தினத்திற்கு வாழ்த்துச் செய்தி அளிப்பதில் பெருமையும் பெருமகிழ்வும் கொள்கின்றேன்.

திருச்சபையில் பொதுநிலையினர் தொகை 99%மாக இருந்தும் அவர்களின் பங்களிப்பு மிகமிகக் குறைவாக இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற்கு 16:15) என்ற இறைமகன் இயேசுவின் அழைப்பு திருமுழுக்கு பெற்ற எம் ஒவ்வொருவருக்கும் விடுக்கும் அழைப்பாக உள்ளது. திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும், தான் வாழுகின்ற ஒவ்வொரு சூழலிலும் புளிக்காரம் போல ஊடுருவி இறையரசை அறிவிக்க முன்வர வேண்டும்.



"பொது நிலையினர் எங்கு இறைபணி புரிய வில்லையோ அங்கு திருச்சபை வளரவில்லை" என்ற கூற்றை இல்லாதொழிக்க 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின் பொதுநிலையினருக்கு வினை தந்துள்ள உன்னதமான பொது நிலையினர் அழைத்தலில் பிரமாணிக்கமாய் பணிபுரிய ஒவ்வொருவரையும் வாழ்த்தி அழைக்கின்றேன்.

அன்புடன்:
இ. அ. அலோசியஸ் ஜெயம்
தலைவர்
யாழ் மறைமாவட்ட
பொதுநிலையினர் கழகம்

# பொதுநிலையினர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படட்டும்.

பொதுநிலையினரின் எழுச்சியே திருச்சபையின் வளர்ச்சி இறையாட்சியின் மலர்ச்சி. உலகெங்கும் சென்று பணிபுரிய வேண்டும். இறையாட்சியின் நற்செய்தியை அறிவிக்க எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து விடுத்த அழைப்பை திருச்சபை நிறைவேற்ற வேண்டுமானால் அதன் பெரும்பான்மை உறுப்பினராகிய பொதுநிலையினர் தமது அழைப்பையும், பணியையும் பற்றிய விழிப்புணர்வு பெற வேண்டும். அந்த வகையில் எமது மறைமாவட்டத்தில் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்காக பொதுநிலையினர் கழகம் செயற்பட்டு வருகின்றது. மறைக்கோட்ட ரீதியிலும், மறைமாவட்ட ரீதியிலும் சிறப்பாக இயங்கும் இக்கழகங்கள் பொது நிலையினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதோடு உலகின் பாகியாய் திகழும் தமது பணியை முன்னெடுக்க பல முயற்சிகளையும் செய்து வருகின்றன.



யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குநர்.

ஆண்டுதோறும் கிறிஸ்து அரசர் விழாவன்று நினைவு கூரப்படும் பொது நிலையினர் தினம் இந்த வகையில் முக்கியமான ஒரு நாளாகும். ஞாயிறு வழிபாடுகளூடாக பொதுநிலையினரின் கடமைகளை வலியுறுத்த இந்நாள் உதவுகின்றது. ஆகவே இத்தினத்தையொட்டி அந்த வாரத்திலே பங்குகளில் பல்வேறு விழிப்புணர்வு முயற்சிகளை முன்னெடுப்பது வரவேற்கத்தக்கது. பொது நிலையினர் திருச்சபையின் திருத்தூதுப் பணியில் தமக்குள்ள பங்கை புரிந்து கொள்வதும் அதை முன்னெடுக்கத் தேவையான பொது நிலைத் திருப்பணிகளை அடையாளம் கண்டு அவற்றை ஆற்ற முன்வருவதும் அவசியமாகும். பொதுநிலையினரின் திருப்பணிகளை மையமாகக் கொண்டே இவ்வாண்டுக்கான பொதுநிலையினர் தினம் அனுசரிக்கப்படுகின்றது. ஆகவே இந்நாள் எமது மறைமாவட்டத்தில் பங்குகள் தோறும் பொதுநிலையினர் விழிப்புணர்வை முன்னேற்றும் ஒரு நாளாக அமைய வாழ்த்தி நிற்கின்றேன்.

# நான் எவ்வகைப் பொதுநிலையினர்

திருமுழுக்கின் மூலம் இறையழைப்பைப் பெற்ற திருநிலையினர், துறவறத்தார் தவிர்ந்த இறைமக்களே பொது நிலையினர் ஆவர். பொதுநிலையினர் ஆகிய நாம் பொதுக் குருத்துவத்தின் மூலம் இயேசுவின் கற்பித்தல், தூய்மைப்படுத்தல், வழிநடத்துதல் ஆகிய மூன்று பணிகளிலும் ஈடுபட அழைப்புப் பெற்றுள்ளோம். கிறிஸ்துவோடு உயிருள்ள ஒன்றிப்பைக் கொண்டிருப்பதன் ஊடாகவே இப்பணிகளை நாம் சிறப்பாக ஆற்றமுடியும் என்று (புனித யோவான் 15:5) தனது நற்செய்தியினூடாக வலியுறுத்தியுள்ளார். ஆகவே கிறிஸ்துவோடு ஒன்றித்து தூய ஆவியானவரின் அருட்கொடைகளை பெற்று பல திருப்பணிகளில் ஈடுபடவேண்டிய நாம் ஒவ்வொருவரும் எமது நிலைபற்றி சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது.

இன்று திருச்சபையில் பொது நிலையினரின் பல்வேறு நிலைகளை ஒரு ஆய்வாளர் பின்வருமாறு சுட்டிக் காட்டுகின்றார்.

1. ஞாயிறு வழிபாட்டில் பங்கேற்கும் சடங்குக் கிறிஸ்தவர்கள்.

2. தியான வழிபாடுகள், நற்செய்திக்கூட்டங்கள், அருட்கொடை இயக்கங்கள், ஆவியின் எழுப்புதல் கூட்டங்களில் மட்டும் கலந்து ஒரு கனவுலகில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

3. பங்கு மறைக்கோட்ட, மறைமாவட்ட ரீதியில் இடம்பெறும் கருத்தரங்குகள், பயிற்சி பாசறைகளில் கலந்து கொள்வதோடு பங்குப் பணிகளில் தவறாமல் ஈடுபடும் பணியார்வம் உள்ளவர்கள்.

4. தாம் வாழுகின்ற சமூகத்தில், சமூக சேவையாளராக, அரசியல் வாதிகளாக, அதாவது ஈடுபாட்டுடன் மக்கள் பணியாற்றுவதன் மூலம் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக வாழ நினைப்பவர்கள்.

மேலே குறித்துக்காட்டப்பட்டுள்ள நான்கு நிலைகளிலும் "நான்" எந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன் என்பது பற்றி சிந்திக்க, சிந்தித்து எமது வாழ்க்கை முறையில் மாற்றங்களை ஏற்படுத்த பொதுநிலையினர் தினம் (21-11-2010) எமது மறைமாவட்டத்தில் நினைவு கூரப்படுகின்ற இந்த மாதத்தில் உங்கள் ஒவ்வொருவரையும் அழைக்கின்றேன். மேலும் ஆர்வமுள்ளவர்கள், தங்கள் பங்குகளில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற பொதுநிலையினர் அமைப்புக்களான பக்திச் சபைகள், அன்பியம் போன்றவற்றில் இணைந்து கொண்டு பணியாற்ற முன்வர வேண்டும். மேலும் தற்பொழுது எமது யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகம், பங்குகளில் பொதுநிலையினர் உருவாக்கற் கருத்தரங்குகள், பயிற்சிப் பாசறைகளை நடாத்த எப்பொழுதும் ஆயத்தமாகவுள்ளது என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

பெ. பிரான்சிஸ்
செயலாளர்
யாழ்மறைமாவட்ட
பொதுநிலையினர் கழகம்.

## "சான்று பகர்ந்து......"

கொடியினில் கிளைபது இணைவது போல
இறைமகன் கிறிஸ்துவில் நாமும் இணைவோம்.
நீரினில் உப்பது கரைவது போல
பணிகளில் நாமும் கரைந்து மறைவோம்.
ஒளியது இருளதை அகற்றுதல் போல
திருமறை ஒளிர சுடராய் வாழ்வோம்
பொதுநிலையோர் குருத்துவம் மண்ணில் வளர
சான்று பகர்ந்து சாட்சியாய் வாழ்வோம்.

"அலெக்ஸ்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகப் பெரிய இயேசு சிலை



போலந்தின் பொஸ்னான் நாகரின் மேற்கே 110 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சுவிபோட்ஸின் நகரில் இயேசு கிறிஸ்துவின் மிகப் பெரிய சிலை ஒன்று உருவாக்கப்பட்டது. இச்சிலை வடிவமைக்கும் பணிகளில் பல முறை தொய்வு ஏற்பட்டன. இருப்பினும் அவற்றை எல்லாம் தாண்டி விண்ணைத் தொட்டு நிக்கும் அளவிற்கு பிரமாண்டமாக இச்சிலையின் வேலை நிறைவடைந்தது. வெண்ணிறமாக உருவாக்கப்பட்டிருக்கும் இச்சிலையின் கிரீடம் மட்டும் பொன்நிறத்தால் வடிவமைக்கப்பட்டது. இச்சிலையானது 33 மீற்றர உயரம்கொண்டது. இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த 33 வருடங்களை நினைவு கூரும் வகையில் அமைக்கப்பட்டதாக வடிவமைப்பாளர்கள் கூறுகின்றார்கள். கிரடத்தின் உயரம் 3 மீற்றராக மொத்தமாக 36 மீற்றர் உயரத்தில் பிரமாண்டமாக நிறுவப்பட்டுள்ளார் நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்து.



A.J. நிமல்ராஜன்
யாழ்.பேராலயம்

---

நீங்காத நினைவில்...

## 22 வருடங்கள்



அமரர் லெ.ம.யூட் சக்கறி சந்திரகுமார்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 28-12-1970 | 26-11-1988 |

"இறைவனின் இல்லத்தில்
இன்னிசை முழங்கி
பாசமுடன் பழகி
நேசமகன் உன்னை
பதினெட்டு ஆகுமுன்னே
பாதகர்கள் பறித்ததினை
மறக்குமோ நெஞ்சம்
ஈரவிழிகளுடன் - உன்
நினைவுடன் வாழுகின்றோம்."

பெற்றோர், சகோதரர்கள், மைத்துனிமார், பெறாமக்கள், மற்றும் பாசமுள்ள உறவுகள்.

41/60, வைத்தியசாலை
முன் வீதி,
நாயனமார்கட்டு, நல்லூர்.

Advt-87/10

---

விண்ணுலகில்...

## முதலாவது பிறந்தநாள்



| எங்களோடு | இறைவனோடு |
|---|---|
| 13-07-1914 | 11-11-2009 |

### ஞானப்பிரகாசம் பத்திநாதர்
### [இளைப்பாறிய அதிபர்]

மண்ணுலகில் தனது வாழ்வை முழுமையாக நிறைவு செய்து; விண்ணுலகு சென்று; 11-11-2010 அன்று விண்ணுலகில் தனது முதலாவது பிறந்தநாளை கொண்டாடும் எமது ஐயாவுடன் சேர்ந்து நாமும் மகிழ்ச்சியடைகின்றோம்.

அருட்திரு. ஜெபரட்ணம்
அருட்சகாதரி. புளோறிணா (தி.சி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Advt-88/10

---

## 15ம் ஆண்டு நினைவஞ்சலி ....

அமரர். தேவசகாயம் சிமியோன்
(அனிபபா)



"சீவியத்தில் எம்மை
நேசித்தவர்களே மரணத்திலும்
எம்மை மறவாதீர்கள்"

ஆண்டுகள் 15 போனதே - ஐயா
ஆறவில்லை எம் இதயம்
இன்றுவரை நம்ப முடியவில்லை - நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர்கள் என்று
புன் சிரிப்போடு எம்மை வளர்த்தீரே - உம்
புன்சிரிப்பை கான ஏங்குகின்றோம்
வாழ்ந்திடும் காலமெல்லாம் - நாம்
மறப்போமா உம் முகத்தை
வருந்தி நாம் அழைக்கின்றோம் -
எம்முடன்
திரும்பவும் வந்து சேர்ந்திடுவீர் - ஐயா

மலர்வு 24-03-1950
உதிர்வு 18-12-1995

இல : 106
நாவாந்துறை வடக்கு
யாழ்ப்பாணம்.

Advt 90/10

உங்கள் பிரிவால் தினம் வருந்தும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்,
நண்பர்கள் யாவரும்

---

# உலகம் விரும்பாத உண்மை

அருட்பணி. மா. றேஜிஸ் இராசநாயகம்

எல்லாக் கலாச்சாரங்களிலும் இறந்தோர் தினம் காணப்படுகிறது. ஏனென்றால், எங்களுக்கு மரணம் இயல்பானதாக தோன்றினாலும் அது இலகுவாக ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றல்ல. எனவே, இறந்தோரை நினைவு கூரும் நாட்கள், விழாக்கள், வழிபாடுகள் ஆசியக் கலாச்சாரத்திலே பரவலாகக் காணப்படுகின்றன. கிறிஸ்தவர்களுக்கு மரணமானது ஒரு இயற்கைச் சம்பவம் மாத்திரமல்ல யோபு ஆகமம் 1:21 கூறுவது போல "என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியாய் யான் வந்தேன். அங்கே திரும்புகையில் பிறந்த மேனியாய் யான் செல்வேன். ஆண்டவர் அளித்தார் ஆண்டவர் எடுத்துக் கொண்டார். அவரது பெயர் போற்றப்பெறுக" என்ற பற்றற்ற மனப்பக்குவத்தோடு மட்டும் நின்றுவிடாது, நாமனைவரும் புதியதொரு வாழ்வுக்கு கடந்து செல்வதாக நற்செய்தி அறிவிக்கின்றது.

### மரணத்துக்கு ஒரு புதிய பரிமாணம்

புதிய ஏற்பாட்டின் மையப்பொருளாகிய கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும் ஒரு புதிய விருப்பத்தேர்வை, புதிய பரிமாணத்தை மரணத்திற்குக் கொடுக்கிறது. மரணத்திற்கு அப்பாலுள்ள வாழ்வு கிறிஸ்துவின் உயிர்ப்பு என்ற கொடையிலே, வாழ்வின் வேறொரு நிலையை அல்லது பரிமாணத்தை வெளிப்படுத்துகிறது. அது கிறிஸ்துவில் உயிர்பெற்று, மூவொரு கடவுளின் வாழ்வில் பங்குபற்றும் பேரழைப்பாக மாறுகிறது. பவுல் அப்போஸ்தலரின் மொழியில் கண்ணால் காணமுடியாததும் மனித மரணத்திற்கு அப்பாற்பட்டதுமான ஒரு புதிய வாழ்வாகவும், புதிய யுகத்தின் பிறப்பாகவும், ஒரு புதிய உடலின் உயிர்ப்பாகவும், திருவெளிப்பாடு கூறுகின்ற புதிய வானம் புதிய பூமியாகவும் சித்திரிக்கப்படுகின்றது. இந்த அற்புதமான புதிய தசாப்தத்தின் நுழைவாயிலாக மரணமும் கல்லறையும் குறிகாட்டப்படுகின்றன.

### வாழ்வின் திறவுகோல்

புனிதர் ஒருவர் சிறந்ததோர் ஓவியனை அழைத்து சாவை மக்களுக்கு தத்ருபமாகச் சித்திரிக்கக்கூடிய ஒரு ஓவியத்தை வரைந்து கொண்டு வரும்படி கூறினார். அந்த ஓவியனும் சில நாட்கள் கழித்து மரணத்தை விளக்கக்கூடிய ஓவியத்துடன் வந்தான். அதில் மிகவும் வலிமையும் கொடூரமுமான ஒரு மனிதன் கையில் பெரிய கதாயுதமொன்றை வைத்திருந்தான். படத்திற்கான விளகத்தை கேட்ட பொழுது, சாவு என்பது மனிதன் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு கொடியவன். அவன எவரையும் எவ்வேளையிலும் தாக்குவான் என்று ஓவியன் கூறினான். அப்பொழுது புனிதர் சிரித்துவிட்டு படத்திலுள்ள அந்த மனிதனின் கையிலிருந்த கதாயுதத்தை எடுத்துவிட்டு ஒரு திறவு கோலை வைக்கும்படி கூறினார். ஏனென்றால், நாம் நித்திய வாழ்வுக்குள் நுழைவதற்கான தங்கத் திறவுகோலே மரணம்.

### வாழ்வின் எல்லைகளுக்குள் நுழைய...

நித்திய வாழ்வானது, மூவொரு கடவுளின் வாழ்வில் பங்கு பற்றுவதாக அமைகிறது. இந்த மாபெரும் உண்மையை ஒரு புதிய தரிசனமாக பவுலடியார் 2 கொரி 4:16 இல் "எங்கள் உடல் அழிந்துகொண்டிருந்தாலும் உள்ளார்ந்த உணர்வு நாளுக்குநாள் புதுப்பிக்கப் பெற்று வருகின்றது". என்றும், அழிவுக்குரியது அழியாமையை போர்த்துக் கொள்ளுவது என்ற நித்திய வாழ்வின் எல்லைகளுக்குள் நாம் நுழைவதாகவும் சித்திரிக்கின்றார்.

**மண்ணுக்கு திரும்புவது**
**மனிதனின் மாண்பு அல்ல.**
**மண்ணையே விண்ணகமாய்த் திருப்புவதே**
**மனிதனின் மாண்பு**

### புரட்சிகர கணம்

எனவே, இந்தப் பாரம்பரியமான இறந்தோரை நினைவு கூரும் விழாவானது, இயற்கை உறவு நினைவுகளுக்கு அப்பால் கிறிஸ்துவில் நாம் கொள்ளும் புதிய மறுவாழ்வின் ஆசீர்வாதமாகவும், அதற்கு ஆயத்தமான, ஒடுக்கமான வழியே பயணிக்கும் ஒரு மார்க்கமாகவும் எமக்கு முன் வைக்கப்பட்டிருக்கின்றன. இதையே இயேசுவின் சிலுவை தரும் வெற்றியாகவும் பவுலின் திருமுகங்கள் எம் எல்லோருக்கும் எடுத்தியம்புகின்றன. துன்பங்கள் எல்லாம் அர்த்தம் பெற்று நிறைவு பெறும் புரட்சிகரக் கணமாகவும் மரணத்தை நோக்க எம்மைத் தூண்டுகின்றது. இந்த உண்மையையே ஓர் அறிஞர் "சாவைச் சந்திக்கும்போதாவது சாதாரண மனிதன் வாழ்வைப் பற்றிச் சிந்திக்கின்றான்" என்று கூறுகின்றார். ஆம், சாகப் பயந்தவன் பயந்தே சாவான். சாவைப் பற்றிய உணர்வோ சாவுக்குப் பிற்பட்ட நிலை பற்றிய எண்ணமோ விலங்குகள் எவற்றிற்கும் இல்லை என்பது ஆய்வு செய்யப்பட்ட உண்மை. மனிதனுக்கு மட்டுமே சாவுபற்றிய உணர்வு உண்டு. இந்தச் சாவுபற்றி சிந்திக்கும் பொழுது, சாவின் பின்னர் ஏற்படப்போகும் நிலைபற்றிய பயமும் அங்கலாய்ப்புமே சாவு பற்றிய எண்ணத்தைக் கொடூரமாக்குகிறது. இந்தப் பயத்தையும் அங்கலாய்ப்பையும் இயேசு தனது சிலுவை மரணத்தால் எடுத்துவிட்டார். இயேசு தன் உயிர்ப்பின் மூலம் நம்முள் விதைத்த புதுவாழ்வு, நாம் எதிர்நோக்கியுள்ள நிறைவாழ்வுக்கு அடையாளமும அச்சாரமுமாக இருக்கிறது. இதனால் தான் இறைவாக்கினர் எசாயா இறைவனோடு நம்மை ஒன்றிணைக்கும் இவ்வாழ்வை மகிழ்ச்சி நிறைந்த விருந்திற்கு ஒப்பிடுகின்றார். எமக்கு முன் சென்றவர்கள் கிறிஸ்து இயேசுவில் உயிர் வாழ்கின்றார்கள். நாமும் ஒருநாள் அவர்களோடு இணைந்து கொள்வோம். ஏனென்றால், உறவுகள் என்றும் அழிவதில்லை. உறவுகள் புனிதமானவை; அவற்றை நாம் என்றும் மதிக்கவும், பேணிக்காக்கவும் வேணடும். இறந்தோரை நினைவுகூர அழைக்கப்படும் நாம், ஒவ்வொருவரும் உலகம் விரும்பாத இந்த உண்மையாகிய சாவை சந்திக்கவும் அரவணைக்கவும் எம்மை எவ்வேளையிலும் தயாராக்கிக் கொள்வோம்.

---

## 15ம் ஆண்டு நினைவு அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20-09-1918 | 08-11-1995 |

செல்வி. அருளம்மா மாற்கு

"சீவியத்தில் எம்மை அன்பு செய்த
உங்களை மரணத்திலும் மறவோம்"

நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் சுவாமி. இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி வேண்டுகின்றோம்.

நவாலி தெற்கு
மானிப்பாய்.

தகவல்:
திருமதி திரேசா யேசுதாசன்
(பெறாமகள்)

Advt-89/10

---

## தேவைகள் கிடைக்க

அலாவுதீனும் அற்புத விளககும் என்ற திரைப்படத்தை நாம் பார்த்திருப்போம். அதிலே அலாவுதீன் எப்பொழுதெல்லாம் அந்த விளக்கை தேய்ப்பானோ அப்போதெல்லாம் அவன் நினைப்பதை செய்ய முடியும். அதுபோல நாம் எப்போதுதெல்லாம் செபிக்கின்றோமோ அப்போதெல்லாம் கேட்க்கும் தேவையை அறிந்த இறைவன் கேட்பதை விட அதிகமாக தருகின்றார். இதை உணர்ந்தவர்களாக இறைவனுடன் உறவு நிலைக்கு நமக்கு இடையில் வரும் தடைகளை எல்லாம் உதறி எறிந்து விட்டு, நாம் செபத்தில் கவனமெடுத்து நாம் ஒரு செபசமுதாயத்தை கட்டியெழுப்ப முன்வருவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "செயலமர்வுகளில் வழங்கப்படும் கருத்துரைகள், கற்றல் செயற்பாடுகள் மாணவர்களைச் சென்றடைய வேண்டும்"

தகவல்: S.M.வுளோறன்ஸ் (இளவாலை)



## – யாழ். மறைக்கல்வி ஆணைக்குழு இயக்குனர் –

புதிய கல்விச் சீர்திருத்த முறைக்கு ஏற்ப மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் முழுமையான பயனைப் பெற்று, ஆற்றல் மிக்க சமுதாயத்தை உருவாக்க வேண்டுமெனில் அதனை தமது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் ஊடாக வழங்கும் ஆசிரியர்களின் பணி மகத்தானதாக அமைய வேண்டும். அதன் அடிப்படையில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை புத்தாக்கங்களுடன் ஊக்குவித்து, வளமுடையதாக்கும் பொருட்டு ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் செயலமர்வுகளின் உச்சப்பயன மாணவர்களைச் சென்றடைவதன் மூலமே வளர்ந்த வரும் அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி வேகத்திற்கு ஏற்ப, அவர்களின் அறிவாற்றலும் விருத்தியடையும். குறிப்பாகக் கத்தோலிக்க திருமறைப் பாடத்தின் ஊடாக மாணவர்களின் அறிவியல் மட்டு மன்று, ஆன்மீகவியலும் மேம்படுத்தப்பட்டு நல்லொழுக்க விழுமியங்களை சமுதாயத்தில் கட்டியெழுப்ப முடியும். இவ்வாறான வளர்ச்சிக்கு மாணவர்களை வழிப்படுத்தும் பொறுப்பினைக் கொண்ட ஆசிரியர்கள், தமக்கு அளிக்கப்படும் கற்றல், கற்பித்தல செயற்பாடுகளைப் பயனுடையதாக்கி தகுந்த முறையில் மாணவர்கள் மத்தியிலும் செயற்படுத்தும் பொறுப்புடையோராகவும் விளங்க வேண்டும். இவ்வாறு யா/மறைக் கல்வி நடுநிலையத்தில் 19-21, ஐப்பசி, 2010 இல் இடம் பெற்ற கத்தோலிக்க திருமறைப் பாட செயலமர்வு நிகழ்விற்கு ஆசியுரை வழங்கிய மறைக் கல்வி ஆணைக்கு இயக்குனர் அருட்பணி A. ஜோர்ஜ் அடிகளார் குறிப்பிட்டார்.

மேற்குறிப்பிடப்பட்ட செயலமர்வானது தேசியகல்வி நிறுவகத்தின் அனுசரணையுடன், அந் நிறுவகத்தின் சமய விவகார செயறறிட்ட அலுவலர் அருட்பணி லொயிட சாந்தகுமார் அவர்களின் தலைமையில், கொழும்பு, மன்னார் ஆகிய இடங்களில் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்களான செல்வி. ஜோசவ், செல்வி. ரதிபீரிஸ் ஆகியோரின் நெறிப்படுத்தல்கள் மூலமும், அருட சாதனங்கள், திருவழிபாடு, செப வாழ்வு என்பவற்றிற்கான விரிவுரைகளை அருட்பணியாளர்களான ஜெயந்தன் பச்சேக் (அமதி) ஜோண் மவுலிஸ் ஆகியோர் சிறப்புற நடாத்தியமை மிகுந்த பயன்மிக்க அம்சங்களாக விளங்கின.

மேலும் இச்செயலமர்வில் கிளிநொச்சி. முல்லைத்தீவு, மடு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள வலையங்களைச சார்ந்த கத்தோலிக்க திருமறைப் பாட ஆசிரியர்கள் பங்கேற்று பயன் அடைந்தனர்."

# திருமண நாள் வெள்ளி விழா 25ம் வருட நிறைவு

அந்தோனி பத்திமாநேசன் பத்திமாநேசன் மரியதிரேஸ் தோமினிக்கம்மா



இவர்கள் இறைவன் திருவருள் பெற்று, தமது 25ம் வருட திருமண வெள்ளி விழாவை 19-08-2010 அன்று கொண்டாடினார்கள். அவர்கள் உடல், உள ஆரோக்கியத்துடன் மரியன்னையின் பக்தர்களாக வாழ இறை இயேசுவின் அருள் வேண்டி நின்று வாழ்த்தும்..

19-08-2010

அன்புப்பிள்ளைகள் சபீன்ஸ், ஜெபா மற்றும் சகோதர சகோதரிகள், மச்சான்மார் மச்சாள்மார், உற்றார் உறவினர், நண்பர்கள்.

நெடுந்தீவு

Advt-86/10

## அமலமரித் தியாகிகளின்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் ஆயர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் யாவரும் செபம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றது. கடந்த 12 ஆண்டுகளாக அமதிகள் அதி உயர் தலைவராக சிறப்பப்பணியாற்றிய Very Rev.Fr. Wilheim Steckling.OMI அடிகளாரை நன்றியோடு நினைவு கூர்ந்து பாராட்டுகின்றது.

## "உலக விஞ்ஞான தினத்தில்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லியில் நடைபெறும் இரண்டாம் கட்டப் போட்டியின் பின் இந்த 41 பேருக்கு விருதுகள் வழங்கப்படும்.

மேலும் இலங்கைப் பௌதிகவியற் கழகம் நாடளாவிய ரீதியில் நடத்திய "இலங்கை பௌதீகவியல் ஒலிம்பியாட் போட்டி"யிலும் இவர் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று தேசிய விஞ்ஞான மன்றத்தின் உலக விஞ்ஞான தின விழாவில் தங்கப் பதக்கம் பெறவுள்ளார். இவ்விழா நவம்பர் 12ஆம் திகதி கொழும்பு சுகதாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும். தங்கப் பதக்கத்தைத் தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுகளுக்கான அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ்விதாரண வழங்குவார்.

## புனித பவுஸ்தினாவின் திருநாட..... (2ம் பக்கத்தொடர்ச்சி)

மாகவும் உணர்வு பூர்வமாகவும் ஒப்புக்கொடுக்கப்பட்ட இத் திருப்பலியில் இறை இரக்கத்தின் ஆசி உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் குறிப்பாக எங்கள் பங்கிற்கும் கிடைக்க அருள் வேண்டிய அருட்தந்தை இறை இரக்கத்தின் வல்லமையை தமது மறையுரையில் விளக்கி எம்மை இறை இரக்கத்தின் அவசியத்தை உணரச் செய்தார். புதிய பங்கின் முதல் நன்றித் திருப்பலியாக இஞ்ஞாயிறு திருப்பலியை ஒப்புக் கொடுத்த அருட்தந்தை புனித பவுஸ் தினாவின் பரிந்துரையால் இறை இரக்கப் பக்தி மென்மேலும் பெருக வேண்டி விசேஷ ஆசி அளித்ததோடு இத்திரு நாட் திருப்பலி இனிதாக நிறைவேறியது.

இறை இரக்கப் பக்திச்சபை அங்கத்தவர்கள் இத்திருவிழா சிறப்புற நடந்தேற முன் நின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறைப் பங்கின் "கத்தோலிக்க கலை இலக்கிய மன்றத்தின் முதற்கனிகள்"

கடந்த 2005-05-08 அன்று அருட்பணி P. இருதயதாஸ் அடிகளாரால் பருத்தித்துறைப் பங்கில் ஆரம்பித்து வைக்கப்பட்ட "கத்தோலிக்க கலை இலக்கிய மன்றம்" தனது ஆறாவது ஆண்டில் கால் பதித்த வேளையில் எம் பங்கிற்கும், கிராமத்திற்கும் பட்டதாரிகள் அறுவரை பெற்றுத தந்திருக்கிறது. அவர்களுக்கான பாராட்டு விழா கடந்த 24-10-2010 அன்று மாலை 5.30 மணிக்கு மன்ற தலைவர் தலைமையில் பங்குக் குருமனையில் இடம் பெற்றது.

பல்கலைக்கழக மாணவர்கள், உயர்தர மாணவர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து பங்குத் தந்தையை கௌரவ காப்பாளராகக் கொண்டு இயங்கி வரும் இம் மன்றம் கிராமத்தின் கல்வி, கலை, கலாசார வளர்ச்சிக்கு பங்களிப்பை வழங்கி வருகின்றது. இந்நிலையிலேயே 2005ம் ஆண்டு மன்றத்தில் பல்கலைக் கழக மாணவர்களாக இணைந்து கொண்ட சல்வன் ம. சுதாகர், திருமதி றே. றெக்சலா, செல்வி. அ. இருதயநாயகி, செல்வி. அ. யூட்ஸ்ஜெயசீலி, செல்வன் து. ஞானதீபன், செல்வன். அ. வினிஸ்ரன் ஆகியோர் இவ்வாண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற 25ம், 26ம் பொதுப்பட்டமளிப்பு விழாவில் இளங்கலைமாணிப்பட்டதைப் பெற்று பட்டதாரிகளாக வெளியேறியுள்ளனர்.

இவர்களை பாராட்டி கௌரவிக்கும் வகையிலேயே மேற்படி நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந் நிகழ்வுக்கு பருத்தித்துறை கிழக்கு கிராமசேவையாளர், ஆலய அருட்பணிச் சபை அங்கத்தவர்கள அழைக்கப்பட்டிருந்தனர். பட்டம் பெற்ற அறுவரும் மன்ற அங்கத்தவர்களால் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து மன்றத்தின் கௌரவ காப்பாளர் அருட்பணி து.து. மௌலிஸ், கலைத்துறை பொறுப்பாசிரியர் இ.ம.ஜெயசீலன், கிராம சேவகர் க. யோகேந்திர நாதன் ஆகியோர் தங்களது ஆசியுரைகளை வழங்கினார்கள். பட்டதாரிகளாக வெளியேறியுள்ள நீங்கள் உங்கள் கிராமத்துக்கு சேவை செய்ய வேண்டும். உங்கள் பிரதேச கல்வி வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பை நீங்கள் வழங்க வேண்டும் எனவும் இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்து இடம்பெற வேண்டும் என்றும் வலியுறுத்தி கூறினார்கள்.

மேலும் பட்டதாரிகள் அறுவரினதும் எதிர்காலம் சிறக்க தமது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்தார்கள்.

எமது மன்றம் ஆரம்பிக்கப் பட்டு ஆறு வருடங்களில் முதல் தடவையாக ஆறு பட்டதாரிகள் மன்றத்திற்கு கிடைத்தமையை பட்டங்களைப் பெற்று சிறப்பாக வாழ மன்றம் தனது வாழ்த்து தெரிவித்து நிற்கிறது.

தகவல் : அ. நிலா
பருத்தித்துறை

## தூய ஆவியாரின் துணை.. (1ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பலியின் பின்னர் ஆயர் பிள்ளைகளைச் சந்தித்து

I. இறைவார்த்தையை வாசிக்கும் படியும்
II. நேரம் ஒதுக்கி செபத்தில் ஈடுபடும் படியும்
III. ஆனைவரையும் அன்பு செய்யுமாறும்

மூன்று விடயங்களை கூறி இவற்றைக் கடைப் பிடிக்கும்படி கேட்டுக்கொண்டார். அத்தோடு மாணவர்களிடம் சில வினாக்களை வினாவி அவர்களுக்கு பரிசில்களும் வழங்கினார். இறுதியாக மாணவர்களுக்கு சான்றிதழ்களும் நினைவுப் படமும் வழங்கப்படடது.

உறுதிப்பூசுதல் அருட்சாதனத்திற்கு பிள்ளைகளை நெறிப்படுத்தி ஆயத்தம் செய்த பங்குத் தந்தையர்களுக்கும், மறையாசிரியர், பெற்றோர் அனைவருக்கும் ஆயர் அவர்கள் பாராட்டை தெரிவித்தார்.

விண்ணக வாழ்வின்....
8வது நினைவஞ்சலி



அமரர். செ. பேணாட் இராஜேந்திரம்

நான் ஆண்டவருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன். அவரும் என்பக்கம் சாய்ந்து எனது மன்றாட்டைக் கேட்டருளினார். (தி.பா:40:1)

ஆண்டு எட்டு நகர்ந்து போனாலும் உமது நினைவு பாசம் வழிகாட்டல் எம்மை வாட்டுகின்றது - உமது ஆன்மா இறை சன்னிதியில் இன்புற்று சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்.

அன்னை மடியில்
08-06-1939

ஆண்டவனடியில
23-11-2002

2ம் கட்டை
இராஜ வீதி,
கோப்பாய் மத்தி.

Advt-91/10

என்றும் பிரிவால் துயருறும்
மனைவி: இ. பேணடேற்
மகன்: இ. ஜோய்திலிப்குமார்.

## பாஷையூர் பங்கில் முன்னேற்றகரமாக சென்று கொண்டிருக்கும் மறைக்கல்வி பணி...

பாஷையூர் பங்கின் மறைக்கல்வி தினம் 19-09-2010 அன்று ஆரம்பமாகி 26-09-2010 அன்று சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

அன்று காலை 6.15 மணியளவில் மறைக்கல்வி மாணவர்கள், மறையாசிரியர்களுக்கான, சிறப்புத்திருப்பலி பங்குத்தந்தை றோய் பேடினல் அவர்களால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. அருட்தந்தை அவர்கள் தமது மறையுரையில் "யோசவாஸ் அடிகள் மறையாசிரியர்களுக்கு ஓர் முன்மாதிரிகை எனவும், யோசவாஸ் அடிகளார் போன்று நாமும் விசுவாசத்துடன் கூடிய துடிப்பும், இறை பற்றும் கொண்ட மறையாசிரியர்களாக நற்செய்தியை உலகெங்கும் பறைசாற்ற வேண்டு மென்று கூறினார்"

26-09-2010 அன்று மறையாசிரியர்களுக்கான சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. அன்றைய தினம் மறையாசிரியர்கள் தமது வாக்குறுதிகளைப் புதுப்பித்தார்கள். திருப்பலி நிறைவில் மறைக் கல்வி தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்களும், திருவிவிலியத் தேர்வுக்கான சான்றிதழ்களை பங்குத்தந்தை, அருட் சகோதரிகள், மறையாசிரியர்கள் அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அன்றைய தினம 6.00 மணியளவில் மறைக்கல்வி நிலைய இயக்குநரான அருட்பணி அன்ரன் ஜோர்ஜ் அடிகளார் வருகை தந்து மறையாசிரியர்களுடன் கலந்துரையாடும் பொழுது மறைக்கல்வியின் இன்றைய முக்கியத்துவத்தை வளர்ந்து வருகின்ற மாணவ சமுதாயம் உணரக் கூடிய விதத்தில் மறையாசிரியர்கள் நற்செய்தியின் விழுமியங்களை ஆழமாகப் போதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அதன் பின்னர் மறையாசிரியர்கள் ஒன்றுகூடலுடன் இனிதே நிறைவுற்றது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளர் ... அவர்களது அச்சகத்தில் 2010 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org